

# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - NOVEMBER 2024
VOL. 22 ISSUE 8 - 36 PAGES - Rs. 21/-

நவம்பர் 2024

**கர்த்தர் தாமே**
**உனக்கு முன்பாகப் போகிறவர்,**
*அவர் உன்னோடே இருப்பார்;*
*நீ பயப்பட வேண்டாம்*
**(உபாகமம் 31:8)**



# சென்னை அற்புத உபவாச ஜெபம்

அறிக்கை



2024, அக்டோபர் 12, சனிக்கிழமை, சென்னை வானகரம் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுர வளாகத்தில் அற்புத உபவாச ஜெபம் நடைபெற்றது. Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினரின் ஜெபத்தின் மூலம் தாங்கள் தனிப்பட்டவிதத்தில் அற்புதங்களை அனுபவிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு ஆயிரக்கணக்கானோர், உபவாசத்தோடு கூடி வந்தனர்.

சகோ. சாமுவேல் தினகரன் ஆரம்ப செய்தியளித்தார். தேவன், நம்மை சீயோனாக எண்ணுகிறார் என்றும், அவர் எருசலேமை சூழ்ந்திருப்பதுபோல நம்மை சூழ்ந்திருக்கிறார் என்றும் செய்தியில் விளக்கினார். அந்த செய்தி வந்திருந்த அனைவருக்கும் பெரிய தைரியத்தை அளித்தது. தொடர்ந்து சகோதரி ஸ்டெல்லா ரமோலாவும் சகோ. டேனியல் டேவிட்சனும் உள்ளத்தை உருக்கும் பாடல்களை பாடி ஆராதனை வேளையை நடத்தினர். ஆராதனை வேளையில் ஜனங்கள் தேவனை கிட்டிச் சேர்ந்தனர். Dr. பால் தினகரன், சகரியா 4:6 வசனத்தின் அடிப்படையில், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் எல்லாம் கூடும் என்று செய்தியளித்தார். தங்கள் வாழ்வில் ஆண்டவரின் அபிஷேகத்தை நாடும்படி அவர் அனைவரையும் ஊக்குவித்தார். மக்கள் விடுதலையை, அற்புதங்களை, ஆசீர்வாதங்களை அனுபவிக்கும்படி சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன் ஊக்கமாக ஜெபித்தார்கள்.



கூட்டத்தில் சென்னை ஆவடியை சேர்ந்த சகோ. செந்தில் குமார் தன்னுடைய சாட்சியைப் பகிர்ந்து கொண்டார். அவர் மிகுந்த பணக்கஷ்டத்தினால் திண்டாடிக்கொண்டிருந்தார். Dr. பால் தினகரனிடம் ஜெபிக்கக் கேட்டுக்கொண்டபோது, விரைவில் இரட்டிப்பான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வார் என்ற தீர்க்கதரிசன வார்த்தை கிடைத்தது. அவர் ஜெபித்தவண்ணமாகவே, சகோ. செந்தில் குமாருக்கு வியாபாரம் செய்ய ஏற்ற இடம் கிடைத்தது. இப்போது அவர் இரட்டிப்பான ஆசீர்வாதத்தைப் பெற்றுள்ளார்.

மக்கள் ஆவிக்குரியவிதத்தில் பெலப்படும்படி மட்டுமல்ல, அவர்களின் சரீரப்பிரகாரமான தேவையும் சந்திக்கப்படும்படி கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த உபவாச ஜெபத்தின் மூலம் தேவ நாமம் மகிமைப்பட்டது.

இயேசு அழைக்கிறார் சமுதாய சேவை அமைப்பான சீஷா, தேவையுள்ள மூன்று பெண்களுக்கு உணவு விற்பனை செய்யக்கூடிய தள்ளுவண்டிகளையும், நான்கு பேருக்கு தையல் இயந்திரங்களையும் வழங்கியது. இந்த உதவி, அவர்கள் வாழ்வாதாரம் பெறவும், அதன் மூலம் சமுதாயத்திற்கு பங்களிப்பு செய்யவும் வழி செய்துள்ளது.

உபவாச ஜெபத்தைத் தாங்கி, மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக விளங்குங்கள்.

நான் அற்புத உபவாச ஜெபத்திற்கு ரூ............../- நன்கொடை வழங்க விரும்புகிறேன்.

**நீங்கள் நன்கொடை அனுப்புவதற்கான எளிய வழிகளை இந்த இதழின் 14-வது பக்கத்தில் காணலாம்.**


இந்த மாதம்

**அற்புத உபவாச ஜெபம்**

**2024 நவம்பர்**
**16**
**சனிக்கிழமை**
நேரம்:
காலை 10 மணி முதல்

தேவ செய்தியும் ஜெபமும்:
**Dr. பால் தினகரன் & குடும்பத்தினர்**
இடம்: இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம் - வானகரம்
ஜே.சி. கார்டன், 96, பூந்தமல்லி நெடுஞ்சாலை, வானகரம், சென்னை 600 095.
தொலைபேசி: 9940600228 / 9940600229

# பெங்களூரு பங்காளர் கூட்டம்







2024, செப்டம்பர் 21-ம் தேதி, பெங்களூரு ஃப்ரேசர் டவுண் ஜெப கோபுரத்தில் இயேசு அழைக்கிறார் பங்காளர் கூட்டம் நடந்தது. 1,600க்கும் மேற்பட்ட பங்காளர்கள் கலந்துகொண்டனர். Dr. ஷில்பா தினகரன், “என்னால் முடியும்; நான் செய்வேன்” என்ற கருப்பொருளில் செய்தியளித்தார்கள். சகோ. சாமுவேல் தினகரன், ஊழியத்தை டிஜிட்டல் தளங்களில் விரிவாக்குவதற்கு தெய்வீக வழிநடத்துதலின்படி இம்மானுவேல் டிஜிட்டல் திட்டத்தை அறிமுகம் செய்தார். இயேசு செய்த அற்புதங்களைப் பற்றிய செய்தியை சகோ. சாமுவேல் தினகரன் பகிர்ந்துகொண்டார். அது, தேவனுடைய ஆறுதல் அனைவருக்கும் சமீபமாய் இருக்கிறது என்பதை உணர்த்தியது. இறுதியில், அனைவரும் அற்புத சுகத்தையும், மறுரூபமாகுதலையும் அனுபவிக்கும்படி Dr. ஷில்பா தினகரனும், சகோ. சாமுவேல் தினகரனும் உருக்கமாக ஜெபித்தனர். தேவனோடுள்ள தங்கள் ஐக்கியம் புதுப்பிக்கப்பட்டவர்களாக, அவரது அன்பை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளும் விருப்பத்தோடு அனைவரும் திரும்பி சென்றனர்.





# ஆராதனை மாலை

## இளந்தலைமுறையினர் மறக்க முடியாத மாலைப்பொழுது



2024, அக்டோபர் 2-ம் தேதி, மாலை, சென்னையிலுள்ள சகோ.டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரத்தில் நூற்றுக்கணக்கான வாலிப பெண்களும் ஆண்களும் கூடிவந்தனர். சகோ. டேனியல் டேவிட்சனும், சகோதரி ஸ்டெல்லா ரமோலாவும் ஆராதனை நடத்தியபோது, அனைவரும் தேவனை கிட்டிச்சேர்ந்தனர். “துதியின் வஸ்திரங்கள்” என்ற தலைப்பில் சகோதரி ஸ்டெல்லா ரமோலா அளித்த செய்தி, தேவன்மேல் நன்றியறிதலுடன் இருந்து அவர் அளிக்கும் சந்தோஷத்தை அனுபவிக்கும்படி வாலிபர்களை வழிநடத்தியது. எட்ரிட் சகரியா என்ற வாலிப சகோதரர், விபத்தில் பாதிக்கப்பட்ட தன் கை சுகமானது குறித்து சாட்சி கொடுத்தார். ஸ்டெல்லா ரமோலா அவருக்காக ஜெபித்த பிறகு, எட்ரிட் மீண்டும் கிட்டாரை இசைத்து, தேவனை மகிமைப்படுத்த முடிந்தது. இந்த நிகழ்ச்சி, மறக்க இயலாத மகத்தான அனுபவம் கொண்டதாக அமைந்தது.











# முன்செல்லும் தேவன்

அருமையானவர்களே, இந்த மாதத்திலும்,
**"கர்த்தர் உனக்கு முன்பாகப் போகிறவர்"** (உபாகமம் 31:8)
என்ற வசனத்தின்படி, தேவன், தாம் உங்களுக்கு முன்பாகச் செல்வதாக
விசேஷித்த வாக்குத்தத்தத்தை அளிக்கிறார்.

எதுவும் நிச்சயமில்லாத, குழப்பம் சூழ்ந்த, அமிழ்ந்து போகக்கூடிய தருணங்களிலும் தேவன் தம் வார்த்தையில் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் உங்களோடு இருப்பது மட்டுமல்ல, உங்களுக்கு முன்னே வழிகாட்டியாகவும் செல்கிறார். அவர் ஒருபோதும் உங்களைவிட்டு விலகுவதுமில்லை; உங்களைக் கைவிடுவதுமில்லை. ஆகவே, அன்பானவர்களே, பயப்படாதிருங்கள். "**வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம்பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்**" (யாத். 23:20) என்று வாக்குக்கொடுத்துள்ளபடி, தேவன், உங்களுக்கு முன்பதாக வழியை ஆயத்தம் பண்ணியிருக்கிறார் என்று நம்புங்கள்.

பல வருடங்களுக்கு முன்பு, நாங்கள் மிகவும் பெரிய போயிங் 747 என்ற விமானத்தில் பயணம் செய்தோம். அந்த விமானம் தரையிறங்கியபோது, நெருக்கமும் பரபரப்பும் நிறைந்த விமான நிலையத்தில் அவ்வளவு பெரிதான விமானம் நிற்பதற்கு எப்படி இடம் கிடைக்கும் என்று வியந்தேன். ஒரு சிறிய வாகனம், அந்த விமானத்திற்கு வழிகாட்டிச் செல்வதை கவனித்தேன். அது, யானைக்கு அருகில் கொசுவைப் பார்ப்பதுபோல் அவ்வளவு சிறியதாக இருந்தது. அந்த வாகனத்தின் பின்புறம் "என்



Dr. பால் தினகரன் - paul@jesuscalls.org


Pauldhinakaranofficial

பின்னே வா'' (Follow Me) என்று எழுதப்பட்டிருந்தது. மிகப்பெரிய விமானம், தனக்கு நியமிக்கப்பட்டிருந்த இடத்திற்கு பாதுகாப்பாக செல்வதற்கு அந்தச் சிறிய வாகனத்தை பின்பற்றி சென்றது. இன்றைக்கு ஒரு சிறிய வாகனமல்ல, அதிலும் சிறந்த வழிகாட்டி நமக்கு உண்டு. தேவனாகிய கர்த்தர் நம்மை வழிநடத்திச் செல்கிறார். அவர், ''நான் முன்னால் செல்கிறேன். என்னைப் பின்பற்றி வா'' என்று சொல்கிறார்.

### தேவ அன்பு உங்களை வழிநடத்தும்

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிச்சயமானவை. உங்கள் மீதுள்ள அவரது அன்பு அளவற்றது. அமிழ்த்தப் பட்டிருப்பதாக நீங்கள் நினைக்கலாம். ''நான் நம்பிக்கை யற்ற சூழ்நிலையில் இருக்கிறேன்; தொடர்ந்து செல்ல பெலனில்லை'' என்று நீங்கள் கூறலாம். ஆனாலும் தேவன், ''என் பிள்ளையே, நான் உன்னை நடத்து வேன்; உனக்கு முன்னே போவேன்'' என்று சொல்கிறார்.

இயேசுவுக்கு நீங்கள் உங்கள் இருதயத்தை கொடுத்திருப்பதால், அவர் உங்களை வழிநடத்து வார். அவரது இரத்தம், பாவம் நீங்கும்படி உங்களை சுத்தி கரித்திருக்கிறது. தமது இரத்தத் தால் அவர் உங்களை கிரயத் திற்குக் கொண்டிருக்கிறார். நீங்கள் அவருடைய பிள்ளை; அவர் உங்களை விசாரிக்கிறவ ராயிருக்கிறார் (யோவான் 1:12). நீங்கள் செல்லும் பாதை இருளாய் காணப்பட்டாலும், தேவன் உங்களை வழிநடத்துவார். ஆகவே, ''இயேசுவே, நீரே வழி. நீரே என்னை வழிநடத்துகிறீர்; நான் உம்மை விசுவாசிக்கிறேன்; உம்மை நம்புகிறேன்'' என்று விசுவாசத்துடன் கூறுங்கள்.




### தேவன் உங்கள் பாதையைச் செவ்வையாக்குகிறார்

தேவன் உங்களை வழிநடத்தும்போது, உங்கள் வாழ்க்கையில் ஆச்சரியமான காரியங்கள் நடக்கத் தொடங்கும். ''**நான் உனக்கு முன்னே போய், கோணலா னவைகளைச் செவ்வையாக்குவேன்**'' (ஏசாயா 45:2) என்ற வாக்குத்தத்தத்தின்படி, உங்களுடைய வழி எவ்வளவு இக்கட்டு நிறைந்ததாக, கோணலாக இருந்தா லும் தேவன் அதை செவ்வையாக்குவார்.

என்னுடைய 16-வது பிறந்தநாளின்போது, ஆண்ட வர் என்னிடம், ''பால், உனக்கு முன்னே இரண்டு பாதைகளை வைக்கிறேன். ஒன்று மீனின் பாதை. இன்னொன்று நண்டின் கோணலான பாதை. நீ என்மீது நம்பிக்கை வைத்து நேரான பாதையில் செல்வதற்கு முடிவு செய்தால், நான் உனக்கு முன்னே செல்வேன்; உன்னை வழிநடத்துவேன்'' என்று தெளிவாகக் கூறினார். அன்று நான் என் வாழ்வை இயேசுவுக்குக் கொடுத்தேன்; அப்போதிலிருந்து அவர் என்னை நேரான பாதையில் நடத்தி வருகிறார்.

மத்திய பிரதேசத்தில், அசோக் நகர் என்ற பகுதியை சேர்ந்த திரு. டேனியலின் சாட்சியை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். ஒரு காலத்தில் அவர் தேவ ஊழியர்களைக் குறித்து தவறான எண்ணம் கொண்டிருந்தார். தேவ ஊழியர்களை அவர் குறை கூறுவார். ஒருமுறை, அவரது பகுதியில் கூட்டம் நடத்த வந்த தேவ ஊழியரை அவர் எதிர்த்தார். அப்பொழுதிலி ருந்து தினமும் அவருக்கு இரவில் கொடிய கனவுகள் வந்தன. பயத்தில் அழுகிற அளவுக்கு அவை கொடிய வையாய் இருந்தன. பயம் அவரைப் பிடித்து, உறங்க விடாமல் பண்ணியது. அவருடைய உடல் ஆரோக்கி யம் நலிவுற தொடங்கியது. அவரது மனைவி அவரை மருத்துவர்களிடம் அழைத்துச் சென்றார். ஆனால் எந்தவொரு பலனுமில்லை.

இந்நிலையில், 2012-ம் ஆண்டு, லக்னோவில் இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை கூட்டம் நடந்தது. அவர்களும் அந்தக் கூட்டத்திற்கு வந்தி ருந்தனர். நான் அவரை ஒரு போதும் சந்திக்கவில்லையென் றாலும், ஜெப வேளையில், தேவன் அவருடைய பெயரை எனக்கு வெளிப்படுத்தினார். நான் மேடையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்பாக, ''டேனியல் என்று ஒருவரைக் காண்கிறேன்; பொல்லாத ஆவிகள் உங்களை துன்புறுத்தி, தேவ பிரசன்னத்திலிருந்து புறம்பே இழுக்கின்றன. ஆனால், தேவன் உங்களை விடுவிக்கிறார். இயேசுவிடம் வாருங்கள். அவர் உங்கள் இருதயத்தை மறுரூபப்படுத்துவார். நீங்கள் தேவ ஊழியர்களை எதிர்த்தீர்கள். ஆனால், இப்போதிலிருந்து நீங்கள் அநேகருக்கு ஆசீர்வாதமாக மாறுவீர்கள்'' என்று கூறினேன்.

தேவனுடைய செயல் அற்புதமாக இருக்கிறது அல்லவா? அப்படி அற்புதமானவிதத்தில் தன் பெயர் கூப்பிடப்பட்டது டேனியலை தொட்டது. அந்தக் கூட்டத்தி லேயே அவர் கண்ணீர் சிந்தி, மனம் திரும்பினார். மறுநாள், அவர் மனம் மாறிய மனிதராக மேடைக்கு வந்தார். ஆயிரக்கணக்கான மக்கள் முன்பு, தன் பாவங்களை வெளிப்படையாக அறிக்கையிட்டார். அதன்பின்பு, கொடிய கனவுகள் அவருக்கு வரவில்லை. பயம் நீங்கி சமாதானத்தோடு உறங்கினார்.

இப்போது திரு. டேனியல் தேவ ஊழியர்களை நேசித்து, கனம் பண்ணுகிறார். ஊழியப் பணிகளை

தாங்குகிறார்; பள்ளியை நடத்தும் அவர் தனது மாணவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கிறார். இயேசு அழைக்கிறார் ஊழியத்தில் முக்கியமான பங்காளராக இருக்கிறார்; அவருடைய பிள்ளைகள் இளம் பங்காளர்களாக இருக்கிறார்கள்.

டேனியலின் பாதையை செவ்வை யாக்கிய அதே தேவனால், உங்கள் பாதையையும் செவ்வையாக்க முடியும். எவ்வளவு இழப்புகளை, குழப்பங்களை, மனமுறிவினை கண்டாலும் உங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக் கொடுங்கள். அப்பொழுது அவர் உங்கள் வாழ்வில் தடைகளை அகற்றி, உங்கள் கோணலான பாதைகளைச் செவ்வை யாக்கி, தாம் உங்களுக்கென்று ஆயத்தம் பண்ணியிருக்கிற இடத்திற்கு நேராக உங்களை வழிநடத்துவார்.




### தேவன் உங்களுக்கு வழியைக் காண்பிக்கிறார்

தேவன் உங்களுக்கு வழிகாட்டும்படி உங்கள் முன்னே செல்கிறார். ஞானத் தோடும் கரிசனையோடும் நடத்துகிற அன்பான வழிகாட்டியாகவும் அவர் இருக் கிறார். தேவன், இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்தின் வழியாக வழிநடத்தி யதுபோல, வாழ்வின் எல்லா நெருக்கங் கள் மத்தியிலும் உங்களை நடத்துவார் (யாத்திராகமம் 13:21).

ஆம், அன்பானவர்களே, தேவன் வழிநடத்துகிறவராயிருக்கிறார் (சங்கீதம் 32:8). சிறிதானதோ, பெரிதானதோ எந்த முடிவை எடுக்கும்போதும் உங்களை வழிநடத்தும்படி தமது பரிசுத்த ஆவியி னால் உங்களை நிரப்ப விரும்புகிறார். "**என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற் றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்**" (யோவான் 14:26) என்று இயேசு கூறியி ருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் உங்க ளுக்கு சகாயராக மட்டுமல்ல, போதிக்கிற வராக, தேற்றுகிறவராக, உங்கள் வழி காட்டியாக இருக்கிறார்.

"வரப்போகிற காரியங்களை உங்க ளுக்கு அறிவிப்பார்" (யோவான் 16:13) என்று வேதம் கூறுகிறது. உங்களுக்கு முன்பாக என்ன இருக்கிறது என்று தேவன் அறிந்திருக்கிறார்; அவர், உங்கள் வாழ்க்கை குறித்த தமது திட்டங்களை பரிசுத்த ஆவியானவர் மூலமாக வெளிப் படுத்துவார்.

நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்போது, உங்களை எதிர்காலத் திற்குள் நடத்துகிற இயேசுவின் ஆவியை பெறுகிறீர்கள். பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய திட்டத்தை வெளிப்படுத்து வதோடு, பெலவீனமான தருணங்களில் உங்களை பெலப்படுத்துவார் தேவ சித்தத்தின்படி, அவரது பரிபூரண திட்டத் திற்கேற்ப நம் வாழ்க்கையை அமைப்ப தற்கு உதவும்படி நமக்காக ஆவியானவர் வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8:26).

பல ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியா வில் தொழில்முறை நிபுணராக பணியாற் றிய ஒரு அன்பு சகோதரர் என்னிடம் வந்து, "சகோதரரே, எனக்கு இரண்டு வேலைவாய்ப்புகள் வந்திருக்கின்றன. இரண்டுமே நல்ல வாய்ப்புகள். ஆனால், நான் எதில் சேருவதை தேவன் விரும்பு கிறார் என்று தெரியவில்லை. தயவு செய்து ஜெபித்து, என் எதிர்காலத்தைக் குறித்தும், குடும்பத்தைக் குறித்தும் அவர் வைத்திருக்கிற திட்டத்தைக் கூறுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

நான் அவருக்காக தேவனுடைய வழி காட்டுதலை நாடி ஜெபித்தேன். பரிசுத்த ஆவியானவர் தமது திட்டத்தை வெளிப் படுத்தினார். இரண்டு நாடுகளிலிருந்து வேலைவாய்ப்பு வந்திருந்தன. அதில், முதல் நாட்டிலிருந்து வந்திருந்த வேலை வாய்ப்பு சிறப்பானதாக தென்பட்டது. அடுத்த நாட்டிலிருந்து வந்திருந்த வேலை வாய்ப்பு, முதல் நாட்டுடன் ஒப்பிடும்போது சற்று குறைவானதாக தெரிந்தது. அவர், "சகோதரரே, நான் முதல் நாட்டிலிருந்து வந்திருக்கும் வாய்ப்பை ஏற்றுக்கொள்ளட் டுமா? அது சிறப்பானதாக தெரிகிறது" என்று கேட்டார். ஆனால், பரிசுத்த ஆவி யானவர், "இரண்டாம் நாட்டிலிருந்து வந்திருக்கும் வாய்ப்பு நல்லது" என்று தெளிவாகக் கூறினார். நான் இதை அவரிடம் தெரிவித்தேன். அவர் விசுவா சத்துடன், "உலக சந்தை விவரம் தெரிவிக் கிறபடி நான் செயல்படப் போவதில்லை. இயேசுவுக்கு கீழ்ப்படிந்து, இரண்டாவது நாட்டிலுள்ள வேலையில் சேரப்போகி றேன்" என்று கூறினார். அந்த சமயத்தில் இரண்டாவது நாடு பரவலாக அறியப்பட

வில்லை; வளரும் வாய்ப்புடன் இல்லை. ஆனாலும், அவர் தேவனுடைய வழி காட்டுதலை நம்பினார். அவர் புதிய வேலையில் சேர்ந்த பிறகு சில வாரங்கள் கழித்து, முதல் நாட்டில் அதிக வளரும் வாய்ப்புள்ளதாக தெரிந்த அந்த நிறுவனம், தொழில் சரிந்து மூடப்பட்டு விட்டது. தேவ கரம் தனக்காக செயல்பட்டதை அவர் அறிந்துகொண்டார்.

தற்போது அவர் வேலையில் மிகவும் உயர்ந்து விளங்குகிறார்; அவரது பிள்ளைகள் உயர்கல்வியில் படிக்கின்றனர். இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குகிறார்கள். குடும்பமாக தேவனுடைய வழி காட்டுதலை பின்பற்றுகிறார்கள். தேவனுடைய திட்டம் அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது எத்தனை பெரிய ஆசீர்வாதம்!

இந்த அன்பு சகோதரரை தேவன் வழிநடத்தியது போலவே, உங்களையும் வழிநடத்துவார். எதிர்காலம் நிச்சயமற்றதாக தெரிந்தாலும், உங்களுக்கு நல்ல வழியைக் காண்பிக்க அவர் உண்மையுள்ளவராக இருக்கிறார். உங்கள் வாழ்க்கைக்கு எது சிறப்பானது என்பதை அவர் அறிந்திருப்பதால், பரிசுத்த ஆவியானவரின் வழி காட்டுதலை நம்புங்கள். தேவனை நோக்கிக் கூப்பிடுங்கள்; இயேசுவின் ஆவி உங்களை வல்லமையினாலும் ஞானத்தினாலும் நிரப்பவும், உங்கள் எதிர்காலத்திற்கென்று அவர் வைத்திருக்கும் திட்டங்களை வெளிப்படுத்தவும் இடங்கொடுங்கள்.




## தேவன் உங்களை வழியில் காப்பார்

தேவன் உங்களை வழிநடத்துவதுடன், வழியில் உங்களைப் பாதுகாத்து, தாம் உங்களுக்கென்று ஆயத்தம்பண்ணியுள்ள இடத்தில் கொண்டு சேர்க்கும்படி உங்களுக்கு முன்பதாகவும் செல்வார். "**வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்**" (யாத்திராகமம் 23:20) என்று தேவன் வாக்குப்பண்ணுகிறார். தம்முடைய நோக்கத்திற்கு நேராக நம்மை வழிநடத்தும்படி தேவன் தமது பரலோக பாதுகாப்பை நமக்கு அனுப்புகிறார் என்பதை அறியும்போது நமக்கு எத்தனை ஆறுதல் கிடைக்கிறது!

"**ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்**" (யோவான் 14:2,3) என்று இயேசு கூறுகிறார். இந்த வேத பகுதி, பரலோகத்தில் மட்டுமல்ல; உலகப்பிரகாரமானவிதத்திலும் தேவன் நமக்கு அடைக்கலம், சமாதானம் தரும் இடங்களை, இயேசு நம்மோடு வாசம்பண்ணும் இடங்களை நமக்கென்று ஆயத்தம்பண்ணியிருக்கிறார் என்று கூறுகிறது.

நீங்கள் தேவனுக்கு ஊழியம் செய்தால், அவர் உங்களுக்கென்றும் உங்கள் குடும்பத்திற்கென்றும் ஓர் இடத்தை ஆயத்தம்பண்ணியிருக்கிறார் என்றும், அந்த இடத்தில் பாதுகாப்பு, செழிப்பு, கனம் எல்லாம் உங்களுக்குக் கிடைக்கும் என்றும் அறிந்துகொள்ளுங்கள். "**ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்**" (யோவான் 12:26) என்று வேதம் கூறுகிறது. நீங்கள் ஆண்டவருக்கு ஊழியம் செய்யும்போது, அவர் உங்களை கனப்படுத்துவார்; பாதுகாப்பார்; தீமைக்கு உங்கள் ஆத்துமா விலகியிருக்கும்படி அவரது தயையும் ஆசீர்வாதமும் விளங்கும் இடத்தில் உங்களை கொண்டு சேர்ப்பார்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, என் தந்தை ஒரு தெய்வீக அனுபவத்தை பெற்றார். அவர் ஆவியில் பரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார். இயேசுவின் சிங்காசனத்தின் அருகே நின்றார். பூமியிலிருந்து பரலோகத்திற்கு புதிய ஆத்துமாக்கள் வருவதை அவர் பார்த்தார். அப்போதுதான் வந்து சேர்ந்த ஒரு பெண்ணை வரவேற்கும்படி இயேசு, தமது சிங்காசனத்திலிருந்து எழுந்து நின்றார். அந்தப் பெண்மணி அவரது பாதத்தில் விழுந்து, கண்ணீர் மல்க, "இந்த ஒரு தருணம் எனக்குப் போதும்" என்று கூறினார்கள்.

அந்தப் பெண்மணி பூமியில் மிகவும் பயங்கரமான துன்புறுத்தலை அனுபவித்தவர்கள். இயேசுவின்மேல் விசுவாசம் வைத்ததற்காக, கணவரால் அடிக்கப்பட்டவர்கள். தன் மேலிருந்த காயங்களை இயேசுவிடம், கசப்போடு அல்ல; நன்றியறிதலுடன் காண்பித்தார்கள். "இந்த தருணத்திற்காக எல்லாவற்றையும் சகித்தேன். நீர் எனக்காக ஆயத்தம்பண்ணியிருக்கிற இந்த இடத்திற்கு என்னை கொண்டு வந்துவிட்டீர். நான் இங்கே உம்முடன் வாழ்வேன். இனி துக்கத்துடன் வாழமாட்டேன். என் இயேசுவுடன் வாழ்வேன்" என்று கூறினார்கள்.

தம்மை உண்மையாய் பின்பற்றியவர்களை இயேசுவே நேரடியாக வரவேற்கிறார். இவ்வுலகில் அவர்கள் சகித்த வேதனை, பாடு எல்லாவற்றுக்கும் அவர் பிரதிபலன் செய்கிறார். தம் பிள்ளைகளுக்கென அவர் நித்திய சந்தோஷமும் சமாதானமும் நிறைந்த இடத்தை ஆயத்தம்பண்ணுகிறார்.

தம்முடைய நாமத்திற்காக பாடுபட்டவர்களை இயேசு கனம்பண்ணுவதுபோல, உங்களையும் கனம்பண்ணுவார். அவருக்கு ஊழியம் செய்வதில் அல்லது வாழ்வின் இக்கட்டுகளை கடந்துசெல்வதில் நீங்கள் எந்த சிரமத்தை சந்தித்தாலும், அவர் உங்கள் உண்மையை பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள். உங்களை வழிநடத்தி, காப்பதாக தேவன் கொடுக்கும் வாக்குத்தத்தத்தை நம்புங்கள். அவர் தமது வார்த்தையில் உண்மையுள்ளவராயிருக்கிறார். இந்த பூமியிலும் பரலோகத்திலும் அவர் உங்களுக்கென்று ஆயத்தம்பண்ணும் இடத்திற்கு அவர் உங்களை நடத்துவார்.

## தேவன் பின்னாக நடந்து உங்களை காப்பார்

அன்பானவர்களே, கர்த்தர் உங்களுக்கு முன்பாக போவது மாத்திரமல்ல, எல்லா தீங்கிலிருந்தும், உங்கள் விரோதிகளிடமிருந்தும் உங்களை காக்கும்படி உங்களுக்கு பின்னே நிற்கிறார் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள். "**அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப் பின்னாக நடந்தார்; அவர்களுக்கு முன் இருந்த மேகஸ்தம்பமும் விலகி, அவர்கள் பின்னே நின்றது**" (யாத்திராகமம் 14:19) என்று வேதத்தில் வாசிக்கிறோம். இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக சென்று வழி நடத்திய மேக ஸ்தம்பமானது, பின்னாக வந்து, அவர்களுக்கும் எகிப்திய இராணுவத்துக்கும் இடையே நின்றது. அதனால் எகிப்தியர்களால் இஸ்ரவேல் ஜனங்களை பிடிக்க இயலவில்லை. தேவன் அவர்களுக்கு அரணாக நின்றார்.

அவ்வாறே தேவன் உங்களுக்கும் பின்னே நின்று உங்களை காக்கிறார். பயங்கள், சந்தேகங்கள், உபத்திரவங்கள், தீங்கு செய்யப் பார்க்கும் மனிதர்கள் என்று பல ஆபத்துக்களை நாம் எதிர்கொள்ள நேரிடுகிறது. ஆனால், நீங்கள் பாதுகாப்பற்ற நிலையில் இல்லை. எந்தத் தீங்கும் உங்களை அணுகாதபடி ஆண்டவர் உங்கள் பின்னே வருகிறார். அவருடைய சமுகமே உங்களுக்குக் கோட்டையாக, அடைக்கலமாக, பாதுகாப்பாக விளங்குகிறது.

பில்லி பிரே என்ற தேவ மனிதர் இருந்தார். ஒருநாள் பிசாசு அவரிடம் வந்து, "பில்லி, நீ ஒரு முட்டாள். நீ இயேசுவை விசுவாசிக்கிறாய்" என்று கூறினான். பில்லி, கிறிஸ்துவின்மேல் திடநம்பிக்கை கொண்டவராக, "நான் முட்டாள் அல்ல. நீயே முட்டாள். நீ உன்னுடைய வல்லமை, சௌந்தரியம், ஞானம் ஆகியவற்றின்மேல் நம்பிக்கை வைத்து, தேவனுக்கு விரோதமாக எழும்பினாய்; அதனால் நரகத்தின் குழிக்குள் விழுந்தாய். நான் உன்னைப் போல முட்டாளாக இருக்கமாட்டேன்; இயேசு என்னை பாதுகாப்பார்; என் ஆத்துமாவை காப்பார்; என்னை சுகமாய் தங்கப் பண்ணுவார்; என்றைக்கும் அவர்மேல் நம்பிக்கையாய் இருப்பேன். அவர் என் பக்கம் இருப்பதால் என் எதிர்காலம் சிறப்பானதாக இருக்கும்" என்று கூறினார்.

தேவன் நம்மை பாதுகாக்கிறவர் என்று அனைவரும் நினைவில் வைத்திருக்க வேண்டியதை பில்லி புரிந்திருந்தார். வழியில் எதிரி கொண்டு வரும் தாக்குதலுக்கும் நமக்கும் இடையே தேவன் நிற்கிறார். ஆண்டவர் உங்களைக் காக்கிறவராக இருக்கிறபடியினால், உங்களுக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காது.

ஆகவே, அன்பானவர்களே, உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. வாழ்வில் இக்கட்டுகள் பெருகுவதாக நினைத்தால், விரோதிகள் உங்களுக்கு எதிராக எழும்புவதை கண்டால், ஆண்டவர் உங்களுக்கு முன்னேயும் பின்னேயும் நிற்கிறார் என்பதை மறவாதிருங்கள். "**கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்**" (உபாகமம் 31:8) என்று வேதம் கூறுகிறதுபோல, அவரது அன்பும் வல்லமையும் உங்களைச் சூழ்ந்திருக்கின்றன.

இயேசு ஒருபோதும் உங்களைவிட்டு விலகமாட்டார். எல்லா யுத்தத்தின்போதும், உபத்திரவத்தின்போதும், பயப்படும் தருணங்களிலும் அவர் உங்களோடு இருக்கிறார். நீங்கள் ஒருபோதும் தனியே இல்லை; பாதுகாப்பற்ற நிலையில் இல்லை. அவர் உங்களுக்கான பாதையில் அவர் உங்களை நேர்த்தியாய் நடத்துவார்.

ஜெப கோபுர தொலைபேசி எண்:
8546 999 000
24X7 ஜெப உதவிக்கு 9 மொழிகளில்
E-mail: paul@jesuscalls.org
நேரில் ஜெபிக்க [தினமும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை]








# இஸ்ரேல் ஜெப கோபுரம்





இஸ்ரேல் ஜெப கோபுரம், 11 ஆண்டுகளாக தேவனுடைய தீர்க்க தரிசன வாக்குத்தத்தங்களை நிறைவேற்றும் கனியுள்ள ஊழியத்தை பெருமிதத்துடன் கொண்டாடுகிறது. 2013, நவம்பர் 4-ம் தேதி இந்த ஜெப கோபுரம் தொடங்கப்பட்டது. ஜெருசலேம் நகரின் மையப்பகுதியில், பட்டணத்தின் உயரமான கட்டடத்தின் 20-வது மாடியில் செயல்படும் இந்த ஜெப கோபுரம், இஸ்ரேல் தேசத்திற்கும், பிற தேசங்களுக்கும் நம்பிக்கையின், தேவனுடைய வெளிப்பாட்டின் அடையாளமாக விளங்குகிறது.

**''என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்'' (ஏசாயா 56:7)** என்ற வேத வசனத்தை நிறைவேற்றும்படியாக இஸ்ரேல் ஜெப கோபுரத்தைக் குறித்த தெய்வீக தரிசனம் Dr. பால் தினகரனுக்கு கொடுக்கப்பட்டது. இஸ்ரேல் ஜெப கோபுரம், ஆண்டவரின் தீர்க்கதரிசன செய்திகளை உலகத்திற்கு பகிர்ந்துகொண்டு, ஜெருசலேமின் சமாதானத்துக்காகவும், உலக அரசாங்கங்களுக்காகவும், ஆவிக்குரிய எழுப்புதலுக்காகவும் தொடர்ந்து அர்ப்பணிப்போடு பிரார்த்தனை ஏறெடுக்கவே ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு விசுவாசிகளையும் தேசங்களையும் ஆயத்தப்படுத்தும் ஸ்தலமாக இஸ்ரேல் ஜெப கோபுரம் விளங்குகிறது.

## தீர்க்கதரிசன வேண்டுதலின் ஸ்தலம்

பல்வேறு நாடுகளிலிருந்து இஸ்ரேல் ஜெப கோபுரத்திற்கு ஜெப வீரர்கள் வருகிறார்கள். தீர்க்கதரிசன பிரார்த்தனை ஏறெடுக்க அவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. சமாதானமற்ற சூழல், தற்போது நடக்கும் போர் போன்ற இக்கட்டுகளின் மத்தியிலும் ஜெப வீரர்கள் வந்து, தேசங்களைக் குறித்த தேவனின் தரிசனத்தை, தொடர்ந்து தேடுகிறார்கள். பூமியில் தேவ சித்தம் நிறைவேற்றப்படும்படி இரவும் பகலும் விண்ணப்பங்கள் ஏறெடுக்கப்படுகின்றன. இந்த ஜெப வீரர்கள் தங்கள் தேசங்களுக்கு, தேவனுடைய கிருபையை சுமந்தவர்களாக, அவருடைய செய்தியை பரப்புவதற்கும், அவருடைய வல்லமையை வெளிப்படுத்தவும் பெலன் பெற்றவர்களாக திரும்புகிறார்கள்.

## இஸ்ரேல் ஜெப கோபுரத்தில் நடைபெறும் சிறப்பு கூட்டங்கள்

ஜெபம், ஆராதனை ஆகிய பல கூட்டங்கள் இஸ்ரேல் ஜெப கோபுரத்தில் தொடர்ந்து நடைபெறுகின்றன. மாதந்தோறும் குஜராத்தி மொழி எஸ்தர் ஜெபக்குழுவினர் கூடி ஜெபிக்கிறார்கள். ரஷ்யா - உக்ரைன் பிரச்னை குறித்து Dr. பால் தினகரன் மூலம் வெளிப்பட்ட தீர்க்கதரிசனத்திற்காக ஞாயிறுதோறும் மாலை தீர்க்கதரிசன பிரார்த்தனை ஏறெடுக்கப்படுகிறது. செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் இஸ்ரேல் - ஈரான் பிரச்னைக்காக ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. ஆராதனையுடன், வெளியிட ஊழியமும் வியாழன் மாலை நடத்தப்படுகிறது. இக்கூட்டங்களில் நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டு ஆசீர்வாதம் பெறுகின்றனர். இஸ்ரேல் தேசத்தில் வசிப்போர் ஜெப கோபுரத்திற்கு சென்று தேசங்களுக்காக வேண்டிக்கொள்ளலாம். ஜெபிப்பதன் மூலம் உங்கள் வாழ்க்கையில் சிறந்த ஆசீர்வாதங்களை பெறுவதுடன், உலகிற்கும் நன்மை கிடைக்கும்.

இது குறித்து மேலும் விவரங்களை தெரிந்துகொள்ளவும், இதில் பங்கேற்கவும் திரு. ரவிக்குமாரை +972-50 209-2727 என்ற எண்ணில் வாட்ஸ்அப் மூலம் அல்லது info@israelprayertower.org என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்புகொள்ளுங்கள். நம் வேண்டுதலால், உலகில் மாற்றத்தைக் கொண்டு வர முடியும்; தேவனுடைய தீர்க்கதரிசன வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற முடியும் என்று அறிந்து இணைந்து ஜெபிப்போம்.

தொலைக்காட்சி ஊழியம்



# தொலைக்காட்சி ஊழியத்தின் மூலம் அற்புதங்கள்

### குடும்பம்

Dr. பால் தினகரன் குடும்பத்தினர் 'குடும்பம்' என்ற தலைப்பில் உரையாடி, தங்கள் அனுபவங்களையும், ஒரு குடும்பம் கடந்துசெல்லக்கூடிய இக்கட்டுகள் குறித்தும் பகிர்ந்துகொண்டு, குடும்ப உறவுகளை இன்னும் எப்படி பெலப்படுத்துவது என்றும் வழிகாட்டும் நிகழ்ச்சி. மாதந்தோறும் இயேசு அழைக்கிறார் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இந்த தொடர் நிகழ்ச்சியின் புதிய பகுதி ஒளிபரப்பாகும். இயேசு அழைக்கிறார் யூடியூப் சேனலிலும் ஒளிபரப்பாகும்.

**'இன்றைய ஆசீர்வாதம்' நிகழ்ச்சி:** தினமும் சமூக ஊடக தளங்களிலும் ஃபேமிலி சேனலிலும் ஒளிபரப்பாகும் 'இன்றைய ஆசீர்வாதம்' நிகழ்ச்சியில், Dr. பால் தினகரன் குடும்பத்தினர் தினசரி கொடுக்கும் வாக்குத்தத்த செய்திகளைப் பார்த்து ஆசீர்வாதம் பெறுங்கள்.

### UTurn நிகழ்ச்சி

யூடியூப் மற்றும் ஃபேமிலி சேனலில் ஒளிபரப்பாகும் UTurn நேரலை நிகழ்ச்சியில் டேனியல் டேவிட்சன், ஸ்டெல்லா ரமோலா மற்றும் சாமுவேல் தினகரன் ஆகியோர், தொடர்புகொள்ளும் வாலிபர்கள் மற்றும் வாலிப பெண்களோடு உரையாடுகின்றனர். இந்நிகழ்ச்சியில் விளையாட்டுகள், பாடல்கள், ஜெபங்கள் இடம்பெறும். ஆண்டவரை மையமாக கொண்ட கலந்துரையாடல்கள், கேள்வி - பதில் மற்றும் மகிழ்ச்சியான பொழுது போக்கு வேளைகள் போன்ற இந்நிகழ்ச்சிகளை UTurn ஊழியத்திற்காக சாமுவேலும், ஸ்டெல்லாவும் தயாரிக்கிறார்கள்.

### இயேசு அழைக்கிறார் சிறுவர் (Jesus Calls Kids) யூடியூப் சேனல்

உங்கள் பிள்ளைகள் ஆண்டவரைப் பற்றி அறியும் அறிவில் வளர உதவும் சிறுவர் நீதிக்கதைகள், கிறிஸ்தவ ஆக்சன் பாடல்கள், பப்பெட் ஷோ, விளையாட்டுகளின் வீடியோக்கள் இந்த சேனலில் ஒளிபரப்பாகிறது. Jesus Calls Kids YouTube channel-ஐ சப்ஸ்கிரைப் செய்யுங்கள். இளவயதில் நாம் இணைந்து ஆண்டவருக்குள் வளருவோம்.

### இயேசு அழைக்கிறார் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் வாழ்க்கை மாறிய ஓர் அன்பு சகோதரரின் சாட்சி:

அஸ்ஸாமிலுள்ள தேஜ்பூரை சேர்ந்த பிஜோய் என்பவருக்கு 1993-ம் ஆண்டு அரசு வேலை கிடைத்தது. பிறகு மது அருந்த ஆரம்பித்துள்ளார். அவருக்கு திருமணம் நடந்தது. பக்தியுள்ள பெண்மணியாகிய அவருடைய மனைவி அப்பழக்கத்தை விட்டுவிடும்படி ஆலோசனை சொன்னதோடு, கணவருக்காக ஜெபிக்கவும் ஆரம்பித்தார்கள். ஆனாலும் பிஜோய், குடியை விடவில்லை. அவர் மனரீதியான பாதிப்படைந்து, முரட்டு குணமுள்ளவராக, யாரையும் மதிக்காதவராக மாறினார். இரவில் அருகிலுள்ள பட்டணத்திற்குச் சென்று மது அருந்திவிட்டு வருவார். அவர் மறுவாழ்வு மையத்தில் சேர்ந்து வெளி வந்த பிறகும் மாறவில்லை. அவருடைய மனைவி நம்பிக்கை இழந்துவிட்டார்கள். ஒருநாள் காலை, அவர்கள்



குடும்பமாக அமர்ந்து இயேசு அழைக்கிறார் நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறார்கள். அதில் Dr. பால் தினகரன் ஜெபித்திருக்கிறார். அந்த ஜெபம், பிஜோயின் ஆத்துமாவை தொட்டிருக்கிறது; அவர் அடிமைத்தனத்திலிருந்து அற்புத விடுதலை பெற்றிருக்கிறார். 16 ஆண்டுகள் கடந்தும் அவர் விடுதலையுள்ளவராக, எந்த அடிமைத்தன முமில்லாதவராக இருக்கிறார். தற்போது தன் வீட்டில் ஜெப கூட்டத்தை நடத்துகிறார். இயேசு அழைக்கிறார் ஊழியத்தை எப்போதும் தொடர்புகொள்ளும் பங்காளராக இருக்கிறார். அவரது மறுரூபமடைந்த வாழ்க்கையும், அவரது குடும்பமும் தேவ வல்லமைக்கு சாட்சியாக இருக்கிறது.

ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியை தாங்கி (sponsor) அல்லது இணைந்து தாங்கி (co-sponsor) அல்லது டி.வி. கிளப் பங்காளராகி பல லட்சம் மக்களின் வாழ்க்கை மாறுவதற்கு நீங்கள் உதவலாம்.

**பிற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

முதிர்வயதிலும் கனி, அன்பு (Love) தொடர், ஆராதனை வேளை தொடர் மற்றும் சாட்சிகள் குறும்படங்களாக ஃபேமிலி சேனலிலும், சமூக ஊடக தளங்களிலும் ஒளிபரப்பப்படுகிறது.

**இந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து ஆசீர்வாதம் பெறுங்கள்.**

வல்லமையான தொலைக்காட்சி ஊழியத்தை ஜெபத்தினாலும் காணிக்கைகளாலும் தாங்கும்படி அன்புடன் அழைக்கிறோம்.

**நான் இயேசு அழைக்கிறார் தொலைக்காட்சி ஊழியத்தைத் தாங்குவதற்கு / ஸ்பான்சர் செய்ய விரும்புகிறேன் (உங்கள் தெரிவை குறிப்பிடவும்)**

- ☐ தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றை முழுவதுமாக தாங்குவதற்கு (sponsor) ரூ.30,000/- நன்கொடை அளிக்கிறேன் (என் குடும்ப புகைப்படத்தை இணைத்துள்ளேன்)
- ☐ இணைந்து தாங்குவதற்கு (Cosponsor) ரூ.10,000/- நன்கொடை அளிக்கிறேன்
- ☐ நான் தொலைக்காட்சி ஊழியத்திற்காக மாதந்தோறும் ரூ. ......................... அனுப்பி டி.வி. கிளப் பங்காளராக இணைகிறேன்.

பெயர் ................................................................ பங்காளர் எண் (இருந்தால்) ..........................

முகவரி: ....................................................................................................................

பின்கோடு: ............................ மொபைல் எண்: ................................ இமெயில்:............................

பிறந்தநாள்: ........................... திருமண நாள்: ................................ சிறப்பு நாள்: ..........................

மேலும் விவரங்களுக்கு: மின்னஞ்சல்: tvs@jesuscalls.org

வாட்ஸ்அப்: 9500127277 இணையதளம்: www.jesuscalls.org

உங்கள் அன்பானோரின் பிறந்தநாள் அல்லது திருமண ஆண்டு நிறைவின்போது ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஸ்பான்சர் செய்து, அவர்கள் பரிபூரண ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள உதவுங்கள்.

இயேசு அழைக்கிறார் தொலைக்காட்சி ஊழியத்தைத் தாங்குவதற்கு காணிக்கை அனுப்பும் எளிய வழிகளை இந்த இதழின் 14-ம் பக்கத்தில் காணலாம்.





குடும்ப பகுதி

# ஜெபித்து ஊழியம் செய்யும் குடும்பம்

அன்பானவர்களே, இன்றைய வேகமான உலகில், குடும்பங்கள் பிரிந்துபோவதும், அன்றாட வாழ்வில் மூழ்கிப்போவதும் இயல்பாக காணப்படுகிறது. ஆனால், இம்மாதத்திற்குரிய,

‘‘**அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்**’’ (அப்போஸ்தலர் 10:2)

என்ற தேவனுடைய வார்த்தை, குடும்பங்களை எது உண்மையாய் இணைக்கிறது என்பதை உணர்த்துவதோடு, விசுவாசத்தை பகிர்ந்துகொள்வதும், ஊழியம் செய்வதும் நாம் தேவனையும், ஒருவர் மற்றவரையும் கிட்டிச் சேரப்பண்ணும் என்பதற்கு சரியான உதாரணத்தையும் தருகிறது.

இந்த வேத பகுதி, கொர்நேலியுவின் பக்தியுள்ள குடும்பத்தைப் பற்றி, ‘‘அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான்’’ என்று கூறுகிறது. இவை சில வார்த்தைகளாக இருந்தாலும், விசுவாசத்தால் ஒன்றிணைந்திருக்கும் குடும்பத்திலிருந்து கிடைக்கும் பெலனைப் பற்றி அதிகமாய் உணர்த்துகின்றன. அந்த பெலன், விசுவாசிப்பது மாத்திரமல்ல; விசுவாசிப்பதற்கு ஏற்றவிதமாய் ஒருமித்து வாழ்வதும், ஜெபிப்பதும் அதோடு சேர்ந்து ஊழியம் செய்வதுமாகும். விசுவாசத்தை குடும்பத்தில் ஒருவரோடொருவர் பகிர்ந்துகொள்ளும்போது, அது உறவின் பிணைப்பை வலுவாக்கி, அன்பான குடும்பத்தை உருவாக்குகிறது.



### இணைந்து ஜெபிப்பதன் வல்லமை

ஜெபம், ஆவிக்குரிய வாழ்வின் அடித்தளமாகும். இணைந்து ஜெபிக்கும் குடும்பம், வீட்டினுள் தேவ பிரசன்னத்தை வரும்படி செய்கிற நேர்த்தியான குடும்பமாக விளங்குகிறது. ஒரு வீட்டில் தேவன் வாசம்பண்ணும்போது, அவர் அங்கு எல்லாவற்றையும் நேர்த்தியாக்குகிறார்; தம்மிடம் மட்டுமல்ல; குடும்பத்தில் ஒருவர் மற்றவரை கிட்டிச்சேரும்படி செய்கிறார். ‘‘**இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்**’’ (மத்தேயு 18:20)

EvangelinePaulDhinakaran | evangeline@jesuscalls.org

என்று வேதம் நமக்கு நினைவுப்படுத்துகிறது. குடும்பத்தினர் இணைந்து ஜெபிக்கும்போது, தங்கள் நம்பிக்கை, பயம், போராட்டம் ஆகியவற்றை பாதுகாப்பும், அன்பும் நிறைந்த சூழலில் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கிறது. அது உணர்வுரீதியாக உறவினை பெலப்படுத்துகிறது; சமாதானமாகவும், ஒருவரோடு ஒருவர் இணைந்திருப்பதாகவும் உணரச்செய்கிறது. குடும்பத்தில் தவறாமல் ஜெபிக்கும்போது, நம்பிக்கை, விசுவாசம் ஆகியவை உறுதியான அஸ்திபாரமாக அமைகின்றன. "**நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்**" (பிலிப்பியர் 4:6) என்று வேதம் நம்மை ஊக்கப்படுத்துகிறது.

ஜெபத்தில் தேவனை தேடும் குடும்பங்கள், இணைந்து இக்கட்டுகளை எதிர் கொள்ளும்படி தேவனிடமிருந்து தெய்வீக ஆறுதலையும் பெலனையும் பெற்றுக்கொள்கின்றன. அக்குடும்பங்கள், தாங்கள் ஒருபோதும் தனியே இல்லை. தேவன் எப்போதும் தங்களுடன் இருக்கிறார்; வழிநடத்துகிறார்; பாதுகாக்கிறார் என்று பிள்ளைகளுக்குப் போதிக்கின்றன.

> **இணைந்து ஜெபித்து, ஊழியம் செய்கிற குடும்பங்கள், நம்பிக்கை அன்பு இவற்றை வெளிப்படுத்துகிறதாய், தேவ கிருபையை விளங்கப்பண்ணுகிறதாய் இருக்கின்றன**

இணைந்து ஜெபிப்பதால், பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு விசுவாச பாரம்பரியத்தை கடத்துகிறார்கள். இந்த நடைமுறை பழக்கம், அனுதினமும் வாழ்க்கையில் தேவ பிரசன்னம் இருப்பதை நினைவுறுத்துவதோடு, பிள்ளைகள் பெரியவர்களாகும்போதும் அவற்றை கடைப்பிடிக்கும்படி ஆவிக்குரிய பழக்கத்தை கொடுக்கிறது. "**பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்**" (நீதிமொழிகள் 22:6) என்று வேதம் கூறுகிறது. குடும்ப ஜெபமானது, தேவனை முதலாவது தேடும் பழக்கத்தை உருவாக்கி, பிள்ளைகள் தேவனுடன் தனிப்பட்ட உறவை வளர்த்துக்கொள்ள உதவுகிறது.

## குடும்பமாய் இணைந்து ஊழியம் செய்தல்

ஜெபம், ஆவிக்குரியவிதத்தில் குடும்பத்தை இணைப்பதுபோல, இணைந்து ஊழியம் செய்யவும் வழிசெய்கிறது. வேதமும், "ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து" என்று கூறி, தேவைகளோடு இருக்கிறவர்களுக்கு குடும்பமாய் உதவி செய்யும் உதாரகுணத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறது (அப்போஸ்தலர் 10:2). மற்றவர்களுக்கு இயன்ற வழியில் சேவை செய்வது, கிறிஸ்துவின் அன்பை வாழ்க்கையில் காட்டுவதோடு, தங்கள் தேவைகளுக்கு அப்பால் பார்க்கவும் குடும்பத்தினருக்கு போதிக்கும். குடும்பமாய் இணைந்து, சமுதாய சேவையில், தங்கள் பகுதியிலுள்ள இல்லங்களில், அறக்கொடை வழங்குவதன் மூலம் சேவை செய்வதால், அவர்கள் இயேசுவின் மாதிரியை பின்பற்றுவார்கள். "**மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்**" (மாற்கு 10:45) என்று வேதம் கூறுகிறது. ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வது, குடும்பத்தினுள் ஒருவரைப் பார்த்து ஒருவர் மனதுருகவும், மற்றவருக்கு இரக்கம் பாராட்டுவதற்கும், குடும்பமாய் இணைந்து ஓரணியாக வேலை செய்வதற்கும் பழக்குவிக்கும். பிள்ளைகள், தங்கள் தேவைகளுக்கு அப்பால் நோக்கி, மற்றவர்களின் தேவைகளை உணர்ந்துகொள்ளவும் போதிக்கும்.

மற்றவர்களுக்கு கொடுக்கும் அனுபவத்தை குடும்பத்தினரோடு பகிர்ந்துகொள்வது, தேவைகளின் மத்தியில் இருப்பவர்களுக்கு ஆசீர்வாதமாக அமைவதோடு, குடும்பமாக வாழ்வதன் நோக்கத்தையும் பெலப்படுத்தும். "**நன்மைசெய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்**" (கலாத்தியர் 6:9) என்று வேதம் கூறுகிறது. மற்றவர்களின் வாழ்க்கையில் நன்மையான மாற்றத்தை உருவாக்க குடும்பமாக சேர்ந்து வேலை செய்வது மறக்க முடியாத இனிய நினைவுகளை தருவதோடு, குடும்பத்தினரிடையேயான ஐக்கியத்தையும் பெலப்படுத்தும்.

## பக்தியுள்ள குடும்ப வாழ்வு தரும் பலன்

அப்போஸ்தலருடைய நடபடிகள் 10-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள கொர்நேலியு குடும்பம், பக்தியும் தேவ பயமுமுள்ள குடும்பமானது எவ்வளவு பெரிய மாற்றத்தை உண்டு பண்ண முடியும் என்று காட்டுகிறது. அவர்களுடைய விசுவாசமும் நடத்தையும், பேதுருவை சுவிசேஷத்தை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளச் செய்தது; அநேகர் இயேசு கிறிஸ்துவை அறிந்துகொள்ள வாசலை திறந்தது. குடும்பத்தினர் ஜெபிக்கவும், ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யவும் அர்ப்பணிப்போடு இருந்தால், அவர்கள் ஒருவரையொருவர் கிட்டிச் சேர்வதுடன், மற்றவர்களுக்கு சாட்சியாகவும் விளங்குவார்கள். "மனுஷர் உங்கள்

நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது'' (மத்தேயு 5:16) என்று வேதம் நம்மை உற்சாகப் படுத்துகிறது.

நமக்கு அருமையான சாட்சியாக இருக்கக்கூடிய மார்ட்டினஸ் குடும்பம் என் நினைவுக்கு வருகிறது. மரியா, கார்லோஸ் தம்பதியருக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் வாரந்தோறும் குடும்ப ஜெபம் செய்ய தொடங்கினார்கள். ஞாயிற்றுக்கிழமை மாலை அவர்கள் ஓர் அறையில் கூடி, கரங்களைக் கோர்த்து, தங்கள் நண்பர்களுக்காக, சமுதாயத்திற்காக, தேவையில் இருக்கிறவர்களுக்காக ஜெபிப்பார்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும், சிறு பிள்ளைகள் உள்பட தாங்கள் நினைப்பதை பகிர்ந்துகொண்டு ஜெபிக்கிற பரிசுத்தமான நேரமாக அது மாறியது.

ஜெபிப்பதோடு அவர்கள் நின்றுவிடவில்லை. ஒரு கோடைக்காலத்தில், மார்ட்டினஸ் குடும்பத்தினர், மாதத்தில் ஒருநாள் தங்கள் பகுதியில் உணவு வழங்கும் இடத்தில் தன்னார்வமாக ஊழியம் செய்ய முடிவு செய்தனர். முதலாவது, பிள்ளைகள் அந்த வேலை எப்படியிருக்குமோ என்று எண்ணி, தயங்கினார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் இணைந்து, உணவுக்கான நன்கொடைகளை திரட்டி, உணவு விநியோகம் செய்து, தேவையில் உள்ளவர்களோடு பேசியபோது, அவர்கள் எண்ணம் மாறியது. பிற மனிதர்களின் கஷ்டங்களை அவர்கள் கண்டபோது, தாங்கள் குடும்பமாய் எப்படி உதவ முடியும் என்பதை உணர்ந்தார்கள்.

காலப்போக்கில், குடும்பத்தில் அனைவரையும் இது ஒன்றாக்கியது. பிள்ளைகள் அந்த உணவு வழங்கும் இடத்தில் வேலை செய்யும் நேரத்தை எதிர்பார்த்திருக்க ஆரம்பித்தனர்; மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதில் சந்தோஷம் அடைந்தனர். தாங்கள் சந்தித்த மக்களுக்காக, அவர்கள் பார்த்த இக்கட்டுகளுக்காக ஜெபிக்க ஆரம்பித்தபோது, ஜெப நேரம் இன்னும் அர்த்தமுள்ளதாகியது. மாட்டினஸ் குடும்பத்தினர் அர்ப்பணிப்போடு ஜெபித்ததையும் ஊழியம் செய்ததையும் கண்ட மற்றவர்களும் அவ்வாறு ஈடுபட ஆரம்பித்தனர்; விசுவாச நடக்கையின் வல்லமையை அது விளங்கப்பண்ணியது.

அன்பானவர்களே, குடும்பமாய் ஒருமித்து ஜெபித்து ஊழியம் செய்வது, நல்ல ஆவிக்குரிய ஐக்கியத்தை வளர்க்கும் வழியாகும். அது தாழ்மையை கற்றுக்கொடுக்கிறது; உணர்வுரீதியான பிணைப்பை வலுப்படுத்துகிறது; மற்றவர்கள் பின்பற்றுவதற்கு நல்ல மாதிரியை அமைக்கிறது. ஒருவருக்கொருவர் தொடர்பற்று போகிற இன்றைய உலகில், இணைந்து ஜெபித்து, ஊழியம் செய்கிற குடும்பங்கள் நம்பிக்கை, அன்பு இவற்றை வெளிப்படுத்துகிறவையாய், "**நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்**'' (யோசுவா 24:15) என்று வேதம் கூறுகிறதுபோல, தேவ கிருபையை விளங்கப்பண்ணுகிறவையாய் இருக்கின்றன. உங்கள் குடும்பமும் இதே பாதையில் நடக்கட்டும்.

ஜெபித்து, ஊழியம் செய்து கிறிஸ்துவின் அன்பின் வளரும் உங்கள் குடும்பத்தை ஆண்டவர் தாமே ஆசீர்வதிப்பாராக.




## கோடிக்கணக்கான ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படும்படி இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குவதற்கான வழிகள்

**வங்கி மூலம் :**

IndusInd Bank
Beneficiary Name: JESUS CALLS
Account No.: 555444333222111
Bank: IndusInd Bank, Rajaji Salai Branch, Chennai - 600001. IFS Code: INDB0000167

ICICI Bank
Beneficiary Name: JESUS CALLS
Account No.: 000901056144
Bank: ICICI Bank Ltd., Nungambakkam Branch, Chennai 600 034.
IFS Code: ICIC0000009

*BANK TRANSFER DETAILS CAN BE INTIMATED: partnercare@jesuscalls.org*

QR Code-ஐ ஸ்கேன் செய்து அனைத்து UPI செயலிகள் மூலமும் தாங்கலாம்.

SCAN TO PAY

UPI ID jesuscalls@indus

நீங்கள் வங்கி பரிமாற்றம் மற்றும் வங்கிகளின் செயலிகள் (Apps) மூலமாக நன்கொடை அனுப்பினால், தயவுசெய்து அதைக் குறித்த விவரங்களை உடனே 98409 99923 என்ற எண்ணுக்கு எஸ்எம்எஸ் அல்லது வாட்ஸ்அப் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கவும், உங்கள் நன்கொடை வந்து சேர்ந்ததற்கான ஒப்புதலை உங்களுக்கு தெரியப்படுத்தவும் அது உதவும்.

மணியார்டர் (EMO) மற்றும் 'JESUS CALLS' என்ற பெயரில் டிமாண்ட் டிராப்ட் / காசோலை (CTS) எடுத்து, ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை - 600 028 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

உங்கள் பகுதியிலுள்ள ஜெப கோபுரத்திற்கு நேரில் சென்றும் தாங்கலாம்

# ஜக்தல்பூர் (சத்தீஸ்கர்) மற்றும் ஜம்ஷெட்பூர் (ஜார்க்கண்ட்)
# பிரார்த்தனை திருவிழாக்கள்

பஸ்தர் (Bastar) பிரார்த்தனை திருவிழா, ஜக்தல்பூர்
- 2024 நவம்பர் 8 - 10

UTurn தேசிய வாலிபர் திருவிழா, ஜம்ஷெட்பூர் - 2024 டிசம்பர் 6, 7

இயேசுவை அறிவித்தும், தீர்க்கதரிசன ஊழியம் மூலமும் மக்களை தொட்டு அவர்கள் வாழ்க்கையை மாற்றுதல்




இந்தக் கூட்டங்களுக்காக ஜெபித்தும், சபையாக அல்லது தனி நபராக இவற்றுக்காக கொடுத்தும் எங்களோடு பங்காளராக இணைந்துகொள்ள அழைக்கிறோம்.


இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழா ஊழியத்திற்கு என் பங்கு (உங்கள் தெரிவை குறிப்பிடவும்)

- ☐ 100 பேர் வாழ்க்கையை தொடுவதற்கு ரூ.1,00,000/-
- ☐ 500 பேர் வாழ்க்கையை தொடுவதற்கு ரூ.5,00,000/-
- ☐ 10 பேர் வாழ்க்கையை தொடுவதற்கு ரூ.10,000/-
- ☐ நான் ரூ. .................... காணிக்கை அளிக்க விரும்புகிறேன்



# EMMANUEL
## DIGITAL PROJECT

புதிய மென்பொருள், இணையதளம் மற்றும் மொபைல் செயலி உருவாக்கப் பட்டுக்கொண்டிருக்கிறது



**தெய்வீக பணிக்கான இந்தத் திட்டம் ரூ. 5 கோடி மதிப்பிலானது. தேவன் உங்களை வழிநடத்துகிறபடி இந்தப் பணிக்குக் கொடுத்து இதில் பங்காளராகும்படி அன்புடன் அழைக்கிறோம்.**

இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் டிஜிட்டல் தளங்களின் வாயிலாக பல லட்சக்கணக்கானோர் உடனடி சேவை பெற்று பயன்பெறுவார்கள்.

**இயேசு அழைக்கிறார் இம்மானுவேல் டிஜிட்டல் திட்டத்திற்கு என் பங்கு (உங்கள் தெரிவை குறிப்பிடவும்)**

- ☐ ரூ.1,00,000/-
- ☐ ரூ. 50,000/-
- ☐ ரூ.25,000/-
- ☐ ரூ. ..... (ஆண்டவரால் வழிநடத்தப்படுகிறபடி எந்த தொகையும்)

காணிக்கை அனுப்பும்போது தயவுசெய்து மறவாமல் 'இம்மானுவேல் டிஜிட்டல் திட்டத்திற்கு' என்று குறிப்பிடவும் இணையதளம் மூலமும் காணிக்கை அனுப்பலாம்: www.jesuscalls.org



## கேள்வி பதில்



திரு. கார்த்திக் சேவியரின் கேள்வி...

# தனிமையை மேற்கொள்வது எப்படி?

**சகோ. சாமுவேல் தினகரன் பதிலளிக்கிறார்**

நமக்குள் இருக்கும் கிறிஸ்துவின் வெளிச்சத்தை நாம் சரியாக புரிந்துகொள்ளாதபோது, தனிமை பெரும் பாரமாய் நம்மை அழுத்தும். குறிப்பாக, நம்முடைய இலக்குகளான கனவுகளை நிறைவேற்ற முயற்சிக்கும்போது, தனியே விடப்பட்டதுபோன்ற உணர்ச்சி நம்மை முடக்குகிறது. இதுபோன்ற தருணங்களில், தேவனே நமக்கு உற்ற துணையாக இருக்கிறார் என்பதை மறந்துபோகாமலிருப்பது அவசியம்.

தனிமை உணர்வு திடீரென, குறிப்பாக சுற்றிலும் மனிதர்கள் இருந்தும் யாருடனும் தொடர்பு இல்லை என்று நாம் உணரும்வேளையில் நம்மை வாட்டக்கூடியது. அதுபோன்ற நேரத்தில் நாம், ‘‘யாராவது என்னை ஆதரிப்பார்களா?’’ என்று அல்லது ‘‘என் இலக்குகளை அடைய யாராவது உதவி செய்வார்களா?’’ என்று நமக்குள் கேள்விகள் எழும்பும். நம் கனவுகளையும், நோக்கங்களையும் யாரும் புரிந்துகொள்ளாத நிலை மனமுடையச் செய்யும்.

பிரான்ஸ் தேசத்தை சேர்ந்த ஃபிலிப் பெற்றி என்பவர், உயரமான இடங்களில் கம்பி கட்டி அதன்மீது நடப்பார். பாரிஸ் நகரத்தில் நோட்ர டாம் கதீட்ரலின் கோபுரங்களுக்கு இடையே கம்பி கட்டி நடந்ததால் அவர் பிரபலமானார். அவரும் இதே போன்ற தடைகளை சந்தித்தார். நண்பர்கள் தனக்கு உதவி செய்வார்கள் என்று நம்பி, தன்னுடைய திட்டத்தை அவர் விவரித்தபோது, அதிலிருந்து ஆபத்தை உணர்ந்து அவர்கள் பின்வாங்கினர். அப்படி கட்டடங்களுக்கு இடையே கம்பியில் நடப்பது சட்டவிரோதமானது என்பதால் நண்பர்கள் அவரை தனியே விட்டு விலகிக்கொண்டனர். அந்த சமயத்தில் ஃபிலிப்க்கு காயமும் ஏற்பட்டது. உடனே நண்பர்கள், ‘‘உன்னால் நடக்க முடியாது. மிகுந்த ஆபத்தில் முடிந்துவிடும்’’ என்று எச்சரித்தனர். ஃபிலிப் அப்போது தன்னை புரிந்துகொண்டு ஆதரவுக்கு அளிப்போர் யாருமில்லாத தனிமையை உணர்ந்தார்.

இது, வேதாகமத்தில் யோசேப்பின் வாழ்க்கையோடு ஒத்துப்போகிறது. யோசேப்பின் சொப்பனங்களை ஏற்றுக்கொள்ள முடியாத அவனது சகோதரர் அவனை குழிக்குள் தள்ளினர். உதவி தேவைப்படும்

வேளையில் அவர்கள் அவனை விட்டு விலகிப் போனார்கள்.

தனிமையின் வேளைகளில், தோற்றுப்போனது போல், எந்தப் பாதையில் செல்வது என தெரியாமல் நாம் திகைக்கிறோம். "இப்போது என்ன செய்வது? இதைச் செய்யவேண்டும் என்பது என் கனவு, வாஞ்சை, தாலந்து" என்று கூறுகிறோம். இயேசுவும் இதுபோன்ற வேதனையை அனுபவித்தார் (லூக்கா 22:40). சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு, அவர் தனிமையை அதிகமாய் உணர்ந்தார்; "எனக்காக வேண்டிக்கொள்வீர்களா?" என்று தம் சீஷர்களிடம் கேட்டார். இக்கட்டான நேரத்தில், எதிர்ப்படும் உபத்திரவங்களை சமாளிக்க பெலன் வேண்டும் என்று அவர் துணையை தேடினார். தேவ குமாரனாகிய இயேசுவும், மற்றவர்கள் தன்னோடு இருக்கும் போது கிடைக்கும் ஆறுதலை தேடினார்.

ஒரு பல்கலைக்கழகம் கட்டும்படியான தரிசனம் என்னுடைய தாத்தாவுக்குக் கொடுக்கப்பட்டபோது, அவரும் இதே போன்ற போராட்டத்தை சந்தித்தார். எந்தப் பொருளாதார பின்னணியும் இல்லாத, யாரும் உதவி செய்ய விரும்பாத நிலையில், உதவி கேட்டு அவர் பல இடங்களில் முயற்சித்தார். எல்லா இடங்களிலும் கிடைத்த மறுப்பு, அவருக்கு வெட்கத்தையும், தனிமைப் படுத்தப்பட்ட உணர்வையும் கொடுத்தது. இந்தப் போராட்டத்தின் மத்தியில், பரிதாபகரமாக விபத்தில் தன் மகளை இழக்கக்கொடுத்தது அவர் வேதனையை அதிகரித்தது.

> "நாம் விரும்பாமலே தனிமை உணர்ச்சி ஏற்படலாம்; ஆனால், அது நம்மை மேற்கொண்டுவிடக்கூடாது. தேவ அன்பை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, தனிமை அகன்று போகும்"

மக்கள் அவருடைய கனவை கேலி செய்தார்கள்; அது முடியாது, அவருக்கு நடந்த துர்ச்சம்பவம், தேவன் அளித்த தண்டனை, என்று கூறினார்கள். ஆனாலும், அந்த இருண்ட தருணத்தில், தாம் அவரை மறந்து விடவில்லை என்று தேவன் அவரோடு பேசினார். "தினகரன், உன் வேதனையை அறிந்திருக்கிறேன்" என்று அவரை தைரியப்படுத்தி, "உன்னை ஒருவரும் ஆதரிக்கவில்லையென்றாலும் நான் இருக்கிறேன். என்னை பின்பற்றி வா" என்றார்.

பரிசுத்த ஆவியானவர் கொடுத்த புதுப்பெலத்தால் என் தாத்தா ஊழியத்தை தொடர்ந்தார். பயத்தை மேற்கொள்ளவிடாமல், நம்பிக்கையின் விசுவாசத்தின் வார்த்தைகளை பேசக் கற்றுக்கொண்டார். "**நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்**" (யோவான் 14:18) என்று தேவன் அவருக்கு தெளிவாக வாக்குக்கொடுத்திருந்தார். அந்த வாக்குத்தத்தம் அவருக்கானது மட்டுமல்ல; நம் அனைவருக்குமானது.

வாழ்வில் சவால்களை எதிர்கொள்ள நேரும்போது, நாம் மற்றவர்களுக்கும், ஏன் தேவனுக்கும்கூட மறைந்திருக்க நேரிடலாம். "நான் நிறைய தவறுகளை செய்துவிட்டேன். இனி எனக்கு மதிப்பே இல்லை" என்று நாம் எண்ணலாம். நம்முடைய பாவங்கள் நம்மை கிறிஸ்துவின் வெளிச்சத்திலிருந்து மறைத்து இருளில் இருக்கும்படி செய்யலாம் (யோவான் 3:20). ஆனாலும், தம்மிடம் மறுபடியும் வரும்படியாக, தேவன் தம் நட்பு கரத்தை நீட்டி நம்மை அழைக்கிறார்.

நாமே நம்மை தகுதியில்லாதவர்கள் என்று உணர்ந்தாலும், அவர் எவ்வித நிபந்தனையுமின்றி நம்மை நேசிக்கிறார். "**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்**" (மத்தேயு 11:28) என்று அவர் நம்மை அழைக்கிறார். இந்த வாக்குத்தத்தம், தனிமையின் ஆழத்திலிருந்து நம்மை தூக்கியெடுக்கும்.

வாழ்க்கையில், நாம் விரும்பாவிட்டாலும் தனிமை உணர்ச்சி நமக்குள் எழும்பலாம். ஆனால், அது நம்மை மேற்கொள்ளக்கூடாது. நாம் தேவ பிரசன்னத்தில் இருக்கும்போது, நமக்குத் தேவையான ஆதரவு கிடைக்கும். உங்கள் கனவாக இருக்கும் வெற்றியை, நோக்கத்தை நோக்கிப் பயணிக்கும் போது, தேவன் உங்களோடிருக்கிறார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் போராட்டத்தின் மத்தியில் இருப்பதை அவர் கண்டு ஆறுதல் அளிப்பார். உங்களை தேற்றும்படி, பெலப்படுத்தும்படி அவர் இருப்பதால், நீங்கள் தனிமையாக இல்லை என்பதே உண்மை. தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்; தனிமையை மேற்கொள்ள உதவுவார். அவரது அன்பை ஏற்றுக்கொள்ளுங்கள்; அது உங்கள் பாதைக்கு வெளிச்சமாக விளங்கட்டும்.

# இயேசு அழைக்கிறார் மூலம் ஆயிரக்கணக்கானோருக்கு உணவு



**“பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப்போலாகும்” (ஏசாயா 58:10)**

வாரம் முழுவதும் ஜெப கோபுரங்களில் பல்வேறு கூட்டங்கள் நடைபெறுகின்றன. அவற்றுள் செவ்வாய்க்கிழமை நடைபெறும் உபவாசக் கூட்டம் மிகவும் விசேஷமானதாகும். இக்கூட்டத்தில் மக்கள் ஆண்டவருடைய பாதத்தில், உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களையும், தங்கள் ஆத்துமாவுக்கு மன்னாவான ஆவிக்குரிய போஜனத்தையும் பெற்றுக்கொள்ள உபவாசத்தோடு காத்திருக்கின்றனர்.

கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு முடிந்ததும், கலந்துகொண்டவர் பசியுடன் இல்லங்களுக்கு திரும்ப வேண்டியிருந்தது. தேவ பிள்ளைகளாகிய அவர்கள் வெறும் வயிற்றுடன் திரும்புவதை தவிர்க்க, இயேசு அழைக்கிறார் ஊழியம் அவர்களுக்கு அன்புடன் உணவு வழங்க தீர்மானித்தது (கலாத்தியர் 6:10). ஆண்டவர் செய்ததுபோல, தேவ ராஜ்யம் விரிவாக வேண்டும் என்ற வாஞ்சையில் இதைச் செய்கிறோம் (மத்தேயு 28:19). இந்த மக்களுக்கு உணவு வழங்கி தாங்குவதன் மூலம் அவர்கள்மீதுள்ள உங்கள் அன்பை வெளிப்படுத்த ஓர் அரிய தருணம்.

**“நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்” (மத்தேயு 25:37,40)**

## அற்புத சுகம்

என் மகளின் மார்பில் கட்டி இருந்தது. மருத்துவர்களின் ஆலோசனையின்படி, ஸ்கேன் பரிசோதனை செய்ததில், கட்டி இருப்பது உறுதியானது. இதனால் நாங்கள் அதிகமாய் கவலையடைந்தோம். மருத்துவர்கள் மார்பக புற்றுநோய்க்கான பரிசோதனை செய்யும்படி கூறியபோது, என் மகள் குணம் பெற்றால், இயேசு அழைக்கிறார் உணவு ஆசீர்வாதத் திட்டத்திற்கு ரூ.40,000/- நன்கொடை அளிப்பதாக பொருத்தனை செய்தேன். அந்தப் பரிசோதனை முடிந்ததும், முன்பு கட்டியை பரிசோதித்த அதே மருத்துவர், கட்டி முற்றிலும் மறைந்திருந்ததைக் கண்டு திகைத்துப்போனார். இந்த பெரிய அற்புதத்தை செய்ததற்காக தேவனை மகிமைப்படுத்துகிறேன். - சத்யா, சென்னை.

**சகோதரி சத்யாவை போன்று நீங்களும் மற்றவர்களின் தேவைகளை சந்திக்க முன்வரும்போது, உங்கள் வாழ்வில் பரிபூரண ஆசீர்வாதத்தைப் பெறுவீர்கள்.**







## நீங்களும் உதவலாம்

ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான போஜனத்தைப் பெற்றுக்கொள்வதற்காக வரும் மக்களுக்கு உணவு வழங்கும் திட்டத்திற்கு ஆதரவளித்து இந்த அன்பின் பணியில் பங்குபெறும்படி உங்களை அழைக்கிறோம். கீழ்க்காணும் வகையில் நீங்கள் உதவலாம்.

- பெரிய ஜெப கோபுரங்களில் நடைபெறும் கூட்டங்களில் கலந்துகொள்ளும் 1000 பேருக்கு உணவு வழங்கும் செலவு ரூ.50,000/- (நான்கு தவணைகளாகவும் வழங்கலாம்)
- சிறிய ஜெப கோபுரங்களில் நடைபெறும் கூட்டங்களில் கலந்துகொள்ளும் 500 பேருக்கு உணவு வழங்கும் செலவு ரூ.25,000/- (நான்கு தவணைகளாகவும் வழங்கலாம்)

**உணவு வழங்கும் திட்டத்திற்கு நீங்கள் ஆதரவளிப்பதால், மக்களுக்கு போஜனம் அளிப்பதோடு, அவர்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படியான வாசல்களையும் நீங்கள் திறக்கிறீர்கள். உங்கள் உதாரகுணத்தை கனப்படுத்தும்விதத்தில்,**

- **வேண்டுதல் ஜெபம்:** உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்தினருக்காகவும், அக்கூட்டத்தில் ஜெப வீரர்களும், கூட்டத்தில் கலந்துகொள்ளும் மக்களும் ஜெபிப்பார்கள்.
- **வீடியோ:** இந்த நிகழ்வை நினைவுகூரும்வண்ணம் உங்கள் குடும்ப புகைப்படத்துடன் கூடிய வீடியோவை உங்களுக்கு அனுப்புவோம்.
- **விசேஷித்த ஜெபம்:** Dr. பால் தினகரனும், அவரது குடும்பத்தினரும் உங்களுக்காகவும், உங்களுக்கு அன்பானோருக்காகவும் ஜெபிப்பார்கள்.

---

**உணவு வழங்குவதற்கான நன்கொடையை இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்களில் நேரடியாக செலுத்தலாம் அல்லது 044-23456677 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு விவரங்களை அறிந்துகொள்ளலாம்.**

உணவு வழங்கும் ஆதரவாளர் திட்டத்திற்கு நன்கொடை அளிக்கக்கூடிய வழிமுறைகளை இந்த இதழின் 14-ம் பக்கத்தில் காணலாம்.

SCAN THIS QR CODE TO SUPPORT US THROUGH ALL UPI APPS

scan here

jesuscalls@indus

# உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்...



DO NOT BE *afraid*
DO NOT BE *discouraged*

என் அன்பு ஊழியப் பங்காளரே.
விசுவாச ஊழியத்தில் ஒன்றாய் இணைந்திருக்கிற நாம்.
"கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர். அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை: நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்" (உபாகமம் 31:8)
என்ற வாக்குத்தத்தத்தை இம்மாதத்தில் இறுகப் பற்றிக்கொள்வோம். இந்த வசனம் உங்கள் இருதயத்தை பெலப்படுத்தி. ஆறுதல்படுத்துவதாக.
தேவன் நம்மை வழிநடத்துவதோடு. எல்லா சூழ்நிலையிலும் நமக்கு ஆலோசனை தரும் சிநேகிதராகவும் நம்மோடு வருகிறார்.

தெய்வீக அழைப்பின்பேரிலான இந்த ஊழியத்தில், நாம் தெய்வீக நோக்கத்தாலும், கிறிஸ்துவின் அன்பாலும் பிணைக்கப்பட்டிருக்கிறோம். மற்றவர்களுக்கு ஊழியம் செய்து, தேவனுடைய அன்பை பகிர்ந்து கொள்ளும்போது, தேவன் நம் மூலமாக தம்முடைய சித்தத்தை நிறைவேற்றும்படி நம்மை பெலப்படுத்துகிறார். இந்த சத்தியம் இப்போதும் எப்போதும் உங்களை ஊக்கப்படுத்தி நடத்துவதாக.

### துதி அறிக்கை

2024, அக்டோபர் 12-ம் தேதி, சென்னை, வானகரத்தில் நடைபெற்ற அற்புத உபவாச ஜெபத்தில் நான் செய்தியளித்தேன். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைக் குறித்து பேசி ஜெபித்தபோது, அநேகர் சாட்சிகளாக எழும்பினர்.

சென்னை, புதுப்பேட்டையை சேர்ந்த பிரேமகுமாரி என்ற சகோதரி, மிகுந்த கால்வலியுடன் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். ஜெபவேளையில் அவர்கள் கால்வலியிலிருந்து விடுதலை பெற்றார்கள். நீங்கள் சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில் வசித்தால், அற்புத உபவாச ஜெபத்தில் நேரடியாக கலந்துகொண்டு ஆசீர்வாதம் பெறலாம். இதன் முழு விவரங்களை இப்பத்திரிகையில் 2-வது பக்கத்தில் காணலாம்.

பெங்களூரு, ஃப்ரேசர் டவுண் ஜெப கோபுரத்தில் 2024 செப்டம்பர் 21-ம் தேதி நடந்த பங்காளர் கூட்டம் தேவ மகிமையையும் கிருபையையும் வெளிப்படுத்துவதாக அமைந்தது. நூற்றுக்கணக்கான பங்காளர்கள் நேரடியாக வந்து தனி ஜெபம் பெற்றுக்கொண்டார்கள்; தேவனுடைய வல்லமையான அற்புதங்களை அனுபவித்தார்கள். நகோமி மற்றும் ரூத் ஆகிய வேதாகம கதாபாத்திரங்களை விவரித்து, சாமுவேல் தினகரன், தேவ ஆறுதல் எப்போதும் கிடைக்கும் என்று செய்தியளித்தார். அந்த செய்தி, பங்காளர்கள் அனைவரையும் தைரியப்படுத்தி, தேவ பிரசன்னம் எப்போதும் அவர்களோடிருக்கிறது என்ற நிச்சயத்தையும் அளித்தது.

அக்டோபர் 2-ம் தேதி, சகோ.டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரத்தில் நடைபெற்ற ‘ஆராதனை மாலை’ நிகழ்ச்சி வாழ்வை மாற்றக்கூடியதாய் அமைந்தது. நிகழ்ச்சிக்கு வந்திருந்த வாலிப பெண்களும் ஆண்களும் புதுநம்பிக்கை பெற்றவர்களாக, தேவ அன்பினால் உந்தப்பட்டவர்களாக, மகத்துவத்தை நோக்கிய ஓட்டத்தை தொடரும் ஊக்கம் பெற்றவர்களாக திரும்பி சென்றனர். தேவநாமம் மகிமைப்பட்டது. தேவ ராஜ்யத்திற்கென அடுத்த தலைமுறை எழும்புவது எத்தனை சந்தோஷம்!

## ஜெபக்குறிப்புகள்

### இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம்

**“ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையையும், சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள்” (சங்கீதம் 96:3)**

உலகமெங்குமுள்ள மக்களுக்கு ஆவிக்குரியவிதத்தில் உதவி செய்வதற்கு இணைய இணைப்பு மூலம் திறன்வாய்ந்த வசதியை (e-platform) வடிவமைப்பதே இம்மானுவேல் டிஜிட்டல் திட்டத்தின் நோக்கமாகும். தற்போது, தனிப்பட்டவிதத்தில் தொடர்புகொண்டு பதிலை பெறக்கூடிய இயேசு அழைக்கிறார் மொபைல் செயலி (App), இணையதளம் மற்றும் பங்காளர் தொடர்பு மென்பொருளை உருவாக்கி வருகிறோம். இவை உங்களைப் பற்றி நாங்கள் அதிகமாய் அறிந்துகொள்ளவும், ஒவ்வொருவரின் தனிப்பட்ட தேவைகளுக்கும், வயதுக்கும் ஏற்றவிதமாய் ஆவிக்குரிய உதவிகளை பல்வேறு மொழிகளில் வழங்கவும் உதவும். ரூ.5 கோடி மதிப்பில் செய்யப்படும் இந்த முயற்சி, ஜனங்களுக்கு இன்னும் நன்றாக ஊழியம் செய்ய உதவும்.




### இஸ்ரேல் ஜெப கோபுரம் - தேசங்களுக்கு தீர்க்கதரிசனம்

**“நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையுங்குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொல்லவேண்டும்” (வெளிப்படுத்தல் 10:11)**

இஸ்ரேல் ஜெப கோபுரத்தில் தேசங்களுக்காக தொடர்ந்து தீர்க்கதரிசன ஜெபம் ஏறெடுக்கப்பட்டு வருகிறபடியினால், அது உலகிற்கு வெளிச்சமளிப்பதாக விளங்குகிறது. கடந்த ஆண்டில் பல்வேறு நாடுகளிலிருந்து மக்கள் இந்த ஜெப கோபுரத்திற்கு வந்து, உலகத்திற்காக தீர்க்கதரிசன ஜெபம் ஏறெடுத்தார்கள். அவர்கள், தேவனுடைய வார்த்தையைப் பெற்று, அவருடைய வல்லமையால் நடந்த அற்புதமான கிரியைகளைக் கண்டு, அவருடைய தீர்க்கதரிசனத்தை தங்கள் நாடுகளுக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். இந்த முக்கியமான காலகட்டத்தில் தேசங்களை நம் ஜெபங்களினால் தாங்குவோம். இஸ்ரேல் ஜெப கோபுரத்திற்கு சென்று, அங்கு தேசங்களுக்காக ஏறெடுக்கப்படும் ஜெபத்தில் இணைந்துகொள்ள விரும்புவீர்களானால் info@israelprayertower.org என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்புகொள்ளுங்கள்.

### குழந்தைகள் தினம் - சிறப்பு நிகழ்ச்சி

**“சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது” (மாற்கு 10:14)**

குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, 2024 நவம்பர் 14-ம் தேதியன்று இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள் அனைத்திலும் சிறப்பு ஜெபத்தை நடத்த தீர்மானித்திருக்கிறோம். பிள்ளைகள் கர்த்தர் தந்திருக்கும் சிறப்பான ஈவு. பிள்ளைகள் ஆண்டவரின் சந்தோஷத்தை அனுபவிக்கும்படி அன்று பல போட்டிகள், சிறப்பு கொண்டாட்டங்களை நடத்த இருக்கிறோம். வேதாகமத்தில் ஒரு சிறுவன் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொடுத்ததுபோல, நம் பிள்ளைகள் சிறு வயதிலேயே தேவனுடைய நல்நோக்கத்திற்கென்று பணத்தை சேகரித்து, அநேகருக்கு ஆசீர்வாதமாக விளங்குவதை கற்றுக்கொள்ளும்படியாக அன்று ஒவ்வொரு பிள்ளைக்கும் ஓர் உண்டியலை கொடுப்போம். ஆண்டவர்தாமே அவர்கள் முயற்சிகளை வாய்க்கப்பண்ணி, அவர்கள் வாழ்வில் தம் ஆசீர்வாதங்கள் பெருகும்படி செய்வார். ஆகவே, உங்களுக்கு அருகில் இருக்கும் ஜெப கோபுரத்தில் குழந்தைகள் தின நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு உங்கள் பிள்ளைகளை உற்சாகப்படுத்துங்கள். நம் பிள்ளைகள் தேவனுடைய கரங்களில் இருக்கிறார்கள்; உன்னத நோக்கத்தை அவர் அவர்களுக்கென வைத்திருக்கிறார் என்று விசுவாசித்து, அவர்களுடைய எதிர்காலத்திற்காக ஜெபிப்போம்.

### ஏழைப் பிள்ளைகளுக்கு புத்தாடைகள்

**“மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத்தேயு 25:40)**

ஆண்டவரால் வழிநடத்தப்படுகிறபடி, சீஷா தொண்டு நிறுவனம், நலிவுற்ற மக்களுக்கு கடந்த இருபது ஆண்டு

களாக உண்மையாய் சேவை செய்து வருகிறது. உங்களோடு இணைந்து சீஷாவுக்காக தேவனை துதிக்கிறேன். ஆண்டுதோறும், பண்டிகை காலங்களில் இந்தியா முழுவதும் நலிவுற்ற குடும்பங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான ஏழைப் பிள்ளைகளுக்கு புத்தாடை வழங்கி வருகிறோம். இந்த ஆண்டும் இந்த நற்பணி வெற்றிகரமாக நடத்தப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள். சீஷாவுக்கு நன்கொடை அளிப்பதற்கான விவரங்களை இந்த இதழின் 34-ம் பக்கத்தில் காணலாம்.

### தெய்வீக அனுபவத்தின் நாள்

**"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப்போஸ்தலர் 1:8)**

1980-ம் ஆண்டு, நவம்பர் 20-ம் தேதி, ஆண்டவர் என்னை தம்முடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்த நாள். அது மறக்க இயலாத அனுபவம். அன்றிலிருந்து பரிசுத்த ஆவியானவர் எனக்கு நெருங்கிய சிநேகிதராக, வழிகாட்டியாக இருந்து வருகிறார். அந்த நாளை நன்றியுடன் நினைத்துப்பார்க்கிறேன். இத்தனை ஆண்டு காலம் தேசங்களை குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கவும், ஜனங்களை பெயர் சொல்லி அழைத்து, தேவன் அருளும் விடுதலையை அளிக்கவும் பயன்படுத்துவதோடு, ஊழியத்தை, பல்கலைக்கழகத்தை, குடும்பத்தை நடத்துவதற்கு வேண்டிய ஞானத்தை எனக்கு தந்திருப்பதற்காகவும் அவரை ஸ்தோத்திரிக்கிறேன். நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் இந்த விலையேறப்பெற்ற அபிஷேகத்தை தேடவேண்டும் என்று உற்சாகப்படுத்துகிறேன்.

அபிஷேகத்தைப் பெற நீங்கள் தாகமாயிருப்பீர்களானால், ஜெப கோபுரங்களில் நடக்கும் வாராந்திர கூட்டங்களில் பங்கு பெற்று, பரிசுத்த ஆவியின் மறுரூபமாக்கும் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறேன். ஆவியானவரின் வல்லமையே கிறிஸ்துவுக்கு சாட்சியாக விளங்கும்படி நம்மை பெலப்படுத்தும் என்பதால் தொடர்ந்து அவரைத் தேடுவோம்.

### ஏஞ்சல் தினகரன் - நினைவுகூருதல்

**"கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்" (யோவான் 12:24)**

நவம்பர் 4-ம் தேதி, மறைந்த என் அன்பு தங்கை ஏஞ்சலின் பிறந்தநாளாகும். அன்று விசேஷமாக எங்களுக்காக ஜெபிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அவளது நினைவின் பலனை காருண்யா பல்கலைக்கழகத்தின் மூலம் அனுபவிக்கிறோம். தேவன்பேரில் அவள் கொண்டிருந்த உறுதியான பற்றுதலுதை காட்டும்வண்ணம் காருண்யாவில் இளம்பிள்ளைகளின் வாழ்வு செழிப்பதைக் கண்டு ஆறுதல் அடைகிறோம்.

### நடக்க இருக்கும் பிரார்த்தனை திருவிழாக்கள்

**"நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்" (அப்போஸ்தலர் 10:38)**

ஒவ்வொரு பிரார்த்தனை திருவிழாவிலும் தேவன் வல்லமையாக அசைவாடுகிறார்; நோயுற்றோரை குணப்படுத்துகிறார்; ஒடுக்குதலின்கீழ் இருப்போரை விடுவிக்கிறார்; அநேகரை தம் ராஜ்யத்துக்கு நேராக இழுத்துக்கொள்கிறார். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுகிறதைக் கண்டு பரலோகம் களிகூருகிறது. அடுத்து நடக்க இருக்கும் கூட்டங்களுக்காக எங்களோடு இணைந்து ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**2024 நவம்பர் 2 - பெதஸ்தா ஆசீர்வாத கூட்டம், கோயம்புத்தூர்**

**2024 நவம்பர் 8 - 10 - பஸ்தர்** (Bastar) **பிரார்த்தனை திருவிழா, ஜக்தல்பூர்**

**2024 நவம்பர் 16 - அற்புத உபவாச ஜெபம், சென்னை**

**2024 நவம்பர் 30 - கோட்டயம் பங்காளர் கூட்டம், கேரளா**

**2024 டிசம்பர் 6-7** - UTurn **தேசிய வாலிபர் திருவிழா, ஜம்ஷெட்பூர்**

**2024 டிசம்பர் 7 - பங்காளர் கூட்டம், மதுரை**

**2024 டிசம்பர் 14 - அற்புத உபவாச ஜெபம், சென்னை**

உங்கள் ஜெபமும் ஆதரவும் ஊழியத்தை அதிகமாய் ஊக்குவிக்கிறது. நாம் இணைந்து ஜனங்களை கிறிஸ்துவினிடம் கொண்டு வருகிறோம். நாம் விதைக்கும் ஒவ்வொரு விதையும் நித்திய பலன் அளிக்கும் என்பதை அறிந்து, இதை வாஞ்சையாய் தொடருவோம்.

உண்மையான பங்காளராக ஊழியத்தை ஆதரித்து வருவதால் மறுபடியும் உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். நாம் இணைந்து தேவ ராஜ்யத்தை விரிவாக்கி, கணக்கற்ற ஆத்துமாக்களின் வாழ்வில் நன்மையான மாற்றத்தை ஏற்படுத்துவோம். "**நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்**" (கலாத்தியர் 6:9) என்று அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை தைரியப்படுத்துகிறான். இந்த மகிமையான ஊழியத்தில் தொடர்ந்து முன்னேறும்போது, இந்த வாக்குத்தத்தத்தை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, தேவனுக்குள்ளும், ஒருவருக்குள் ஒருவரும் பெலனை கண்டடைவோம்.

ஆண்டவர் தாமே தொடர்ந்து உங்களை பூரணமாய் ஆசீர்வதித்து, மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக பயன்படுத்துவாராக.

உங்களுக்காக ஜெபிக்கும் அன்பு சகோதரன்,

Dr. பால் தினகரன்.

Karunya
DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++

SUEZ

# Karunya and SUEZ Partner to Solve Water Problems

## with Advanced Industrial Lab and M.Tech in IWRM



**Karunya University** has partnered with **SUEZ**, a global leader in water and waste management, to address water quality issues and improve the safety of urban water distribution systems. An industrial laboratory has been established on campus to develop innovative solutions for urban water distribution.

The laboratory was inaugurated by **Dr. Paul Dhinakaran**, Chancellor of Karunya University and SUEZ experts.

As part of this collaboration, a M.Tech. program in Integrated Water Resources Management (IWRM) was launched, bridging academia and industry through research and hands-on problem-solving.



**Programs Offered:**

ENGINEERING | AGRICULTURE | MANAGEMENT | COMMERCE
ARTIFICIAL INTELLIGENCE | FORENSIC SCIENCE | DIGITAL FORENSICS
MEDIA | ONLINE MBA

**Karunya Institute of Technology and Sciences,**

Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114, Tamil Nadu, India.
E-mail: admissions@karunya.edu - Website: www.karunya.edu

**Toll Free: 1800 88 99 888, 1800 42 54 300**

**APPLY NOW!**

Accreditation | Approvals | Global Rating | India Rating | Global Ranking

CATEGORY 1 Institution UGC GoI

வாலிபர் பகுதி

# தேவனின் மௌனம்

ஸ்டெல்லா ரமோலா



அன்பானவர்களே, உண்மையைச் சொல்வோம் - காத்திருப்பது கடினமானது. ஏதோ ஒரு காரியத்திற்காக ஜெபித்து, ஒன்றும் நடக்காததுபோல் தோன்றும்போது, அது சலிப்பாய், மனதுக்கு துன்பமாய் இருக்கலாம்.

"கடவுள் இப்படி அமைதியாய் இருப்பதன் அர்த்தம் என்ன? அவர் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார் என்பதை எப்படி அறிந்துகொள்வது?" என்று நீங்கள் திகைக்கலாம். நாம் ஓர் அற்புதம் நடக்கவேண்டும் என்றும், நம் வாழ்வில் அவர் இடைப்படவேண்டும் என்றும் ஜெபிக்கும்போது, கீழ்க்காணும் ஏதேனும் ஒரு வழியில் அவரது பதில் அமையலாம்.

1. **சிலவேளைகளில் நாம் ஜெபத்தில் கேட்பது, தேவசித்தத்திற்கு இசைவானதாயிருக்கும்போது அதை அப்படியே பெற்றுக்கொள்வோம்.**
2. **வேறு சில சமயங்களில், தேவன் நமக்கென்று இன்னும் சிறப்பானதை ஆயத்தம்பண்ணி வைத்திருப்பார். ஆகவே, நாம் ஜெபிப்பதை பெற்றுக்கொள்ள மாட்டோம்.**
3. **பலவேளைகளில், தேவன் நமக்குத் தரவிரும்புகிறதற்கு ஏற்ப நம்மை வனைந்து, ஆயத்தம்பண்ணுவதற்காக நம்மை காத்திருக்கும்படி கூறுவார்.**

40 கிலோ எடை இருக்கும் ஒருவர், உரிய பயிற்சியில்லாமல் 100 கிலோ எடையை தூக்கிவிடுவார் என்று எதிர்பார்க்கமுடியாது. அவ்வளவு எடையை தூக்குவதற்கு முயற்சிக்கும்முன்னர் அந்தக் குறிப்பிட்ட நபர், பயிற்சியெடுத்து தன்னை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

அவ்வாறே, தேவன் நமக்கு தரும்படி நினைத்திருக்கும் ஆசீர்வாதங்களுக்கு ஏற்றபடி நம்மை பயிற்றுவித்து, வனைந்து ஆயத்தப்படுத்த விரும்புகிறார். நாம் காத்திருக்கும் வேளையில், அவர் நமக்கு தாழ்மை,

stellaramola@jesuscalls.org stellazlife




பொறுமை, மனதுருக்கம் போன்ற முக்கிய பாடங்களை போதிக்கலாம். நாம் இன்னும் மனதுருக்கம் உள்ளவர்களாக மாறும்படி, அதே சூழ்நிலையை கடந்து செல்லுகிறவர்களை நாம் கவனிப்பது அவசியம் என்று அவர் விரும்பலாம். பொறுமையை இழப்பது எளிதான விஷயம். உடனடி பலனை எதிர்பார்க்கும் உலகில் நாம் வாழ்கிறோம்; ஆனால், தேவனுடைய வழி அப்படி அமையாது.

''**அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்**'' **(பிரசங்கி 3:11)** என்று வேதம் நமக்கு நினைவுப்படுத்துகிறது. ஆகவே, நீங்கள் காத்திருக்கவேண்டிய தருணம் நேரிட்டால், கவலைப்படாதிருங்கள். தேவன், செயல்படுவதுபோல தெரியாவிட்டாலும் அவர் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்.

காட்டுக்குள் சென்ற ஒரு ராஜா பற்றிய கதையை நான் வாசித்தேன். அவர் நடந்து சென்றபோது, பாதை மாறிப் போய்விட்டார்; அவருக்கு மிகவும் பசியெடுத்தது. அங்கும் இங்கும் அலைந்து திரிந்தபோது, காட்டினுள் ஒரு வீட்டைக் கண்டார். அங்கு தனக்கு சாப்பிட ஏதாவது கிடைக்குமா என்று பார்ப்பதற்காக சென்றார். அவர் ராஜாவுக்குரிய ஆடையை அணியாமல், சாதாரண குடிமகனைப்போல இருந்தார். ஆகவே, அந்த வீட்டில் இருந்தவர்கள் அவரை ராஜா என்று அறியவில்லை. ஆனாலும், அவரை அன்பாக வரவேற்று அமர வைத்து, அவருக்கு சமைத்து, சூடாக உணவு பரிமாறினார்கள்.

ராஜா உணவை பார்த்ததும் ஆவலாய் அதைத் தொட்டார். ஆனால், அது விரலை சுட்டுவிட்டது. அதைக் கண்ட அந்த வீட்டுப் பெண்மணி, ''எங்கள் ராஜாவை மாதிரியே பண்றீங்க'' என்று சொன்னாள். ராஜா ஆச்சரியப்பட்டு, ''எப்படி சொல்கிறாய் அம்மா?'' என்று கேட்டார். அவள், ''எங்கள் ராஜாவுக்கு பொறுமையே கிடையாது. அவர் யுத்தத்திற்கு ஆயத்தமாகும்போது, பெரிய பெரிய நாடுகளைப் பிடிப்பதற்கு ஆசைப்படுவார். அவசர அவசரமாய் படையில் ஆட்களை சேர்ப்பார். அவர்களை போருக்கு ஆயத்தப்படுத்தமாட்டார். ஆகவே, படையில் பலர் இறந்து போவார்கள். அவர் சிறிய நாடுகளைப் பிடித்து, சண்டையை ஆரம்பித்தால், பல உயிர்ச்சேதத்தை தவிர்த்திருக்கலாம். அவர் சிறிய யுத்தங்களை செய்து ஆரம்பித்தால், அவருடைய படைவீரர்களுக்கு உரிய பயிற்சி கிடைக்கும்; தேவையான திறனை வளர்த்துக்கொள்வார்கள். பெரிய நாடுகளின் படைகளை எதிர்கொள்ள நேரிடும்போது, அவர்களால் ஜெயம் பெற முடியும்; உயிர்ச்சேதமும் ஏற்படாது. ஆனாலும், ராஜாவின் பொறுமையின்மையால், அநேகரை இழந்துபோகிறோம்'' என்றாள். அந்த பெண்மணியின் வார்த்தைகள் ராஜாவை குத்தின. தன்னுடைய பெருமையாலும், பொறுமையின்மையாலும் போதிய பயிற்சி இல்லாமல் தன் வீரர்கள் அநேகரின் உயிர்கள் பலியாகிவிட்டன என்பதை ராஜா உணர்ந்தான்.

அவ்வாறே நாமும் முதலில் பெரிய ஆசீர்வாதங்களை விரும்புகிறோம். ''ஆண்டவரே, எனக்கு பெரிய ஆசீர்வாதங்கள் வேண்டும்; அதுவும் இப்போதே வேண்டும்'' என்று கூறுகிறோம். ஆனால், ''ஆண்டவரே, இது உமக்குச் சித்தமா?'' என்று கேட்பதற்கு சில வேளைகளில் மறந்துபோகிறோம்.

வாழ்க்கையில் சின்ன போராட்டங்கள் வரும்போது, ''ஆண்டவரே, ஏன் நான் இதன் வழியே செல்ல வேண்டும்?'' என்ற கேட்கிறோம். ஆனாலும், அது போன்ற தருணங்களில் ஆண்டவர் உங்களை பயிற்றுவிக்கிறார். பெரிய பொறுப்புகளை அவர் தரும்போது அவற்றை கையாளும் திறன்பெறும்படி இந்த சிறிய சவால்களின் மூலம் உங்களை வனைகிறார்.

பலவேளைகளில் நாம் இக்கட்டுகளை எதிர்கொள்ளும்போது, ''இந்த இக்கட்டை நீக்கிப்போடும். இது எனக்கு பாரமான காரியம்'' என்று கதறுகிறோம். இயேசுவும் தாம் கலங்கிய வேளையில் தேவனிடம், ''பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது'' என்று ஜெபித்தார் (லூக்கா 22:42). ஆனால், அந்த தருணத்திலும் தேவன் அவரை தனியே விடவில்லை. அவரைப் பெலப்படுத்தும்படி தமது தூதனை அனுப்பினார்.

அவ்விதமே, நீங்கள் பெலவீனமாய், களைப்பாய், ஒன்றும் செய்ய முடியாத சூழ்நிலையில் இருக்கும்போது, தேவன் தமது பெலனை உங்களுக்குத் தருவார். அவர் உங்களை பெலப்படுத்தும்படியாக ஏற்ற நபரை அல்லது உதவியை அனுப்புவார்.


ஆகவே, அன்பானவர்களே, தேவன் செவிகொடுக்கவில்லையெனில், அவர் தூரமாய் இருக்கிறார் என்று எண்ணாதிருங்கள். அவர், வரப்போகும் ஆசீர்வாதங்களுக்கு உங்களை தயார் பண்ணுகிறார். அந்த ஆசீர்வாதங்கள் வரும்போது, அவற்றை கையாளும் அளவுக்கு நீங்கள் பெலன் பெற்றிருப்பீர்கள். ஆகவே, திடன்கொள்ளுங்கள். தேவன் எப்போதும் உங்களுடன் இருக்கிறார்.



இளம் பங்காளர்

# தங்கப் பதக்கம் வென்ற இளம் பங்காளர்





நிவாஸ், இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர். சிறுவயதிலிருந்தே நிவாஸுக்கு கராத்தே கலையின் மீது அதிக ஆர்வம் இருந்தது. விளையாட்டு களத்திலும் வெளியிலும் எதிர்ப்பட்ட சவால்களை, இளம் பங்காளரான நிவாஸ் கடந்துசெல்ல தேவன்மேல் அவர் கொண்டிருந்த விசுவாசமே உதவியது. தேசிய அளவிலான மோசஸ் திலக் நினைவு கராத்தே சாம்பியன் போட்டியில் நிவாஸ், முதலிடம் பிடித்து தங்கப்பதக்கம் வென்றுள்ளார். அவரது உறுதியான அர்ப்பணிப்புக்கும் அவர்மேல் இருந்த தெய்வீக கிருபைக்கும் இந்த வெற்றி சாட்சியாக உள்ளது.

இதற்கென அவர் பல மாதங்கள் கடுமையாக உழைத்தார். தினமும் ஜெபத்துடன் கராத்தே பயிற்சி செய்தார். தடைகளை மேற்கொள்வதற்கு உடல் பெலனும் ஆவிக்குரிய பெலனும் அவசியம் என்று அவர் கூறுகிறார். இளம் பங்காளராகிய நிவாஸ், கிடைத்த தருணங்களிலெல்லாம் ஜெபக்கூட்டங்களில் கலந்துகொண்டதோடு, ஒவ்வொரு போட்டிக்கும் முன்னதாக தேவனுடைய வழிகாட்டுதலையும் நாடினார்.

அகில இந்திய போட்டி தினத்தன்று, மகிழ்ச்சியும் பதற்றமும் கலந்த மனநிலை இருந்தது நிவாஸுக்கு. நாடு முழுவதும் இருந்து வீரர்கள் வந்திருந்தனர். அவரை எதிர்த்து விளையாடியவர்கள் அனைவரும் சண்டைக்கு பழகியவர்கள்; எப்படியாவது முதல் இடத்தை அடைந்துவிட வேண்டுமென ஆக்ரோஷமாக சண்டையிட்டனர். ஆனாலும், நிவாஸ் மிகுந்த சமாதானத்தோடு களத்தினுள் புகுந்தார். "**என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு**" (பிலிப்பியர் 4:13) என்ற வேத வசனமே அவருடைய மனதுக்குள் ஒலித்துக் கொண்டிருந்தது.

போட்டிகளில் சில சுற்றுகள் கடினமானவையாக அமைந்தன. ஆனாலும் அவரது கவனம் சிதறவில்லை. ஒவ்வொரு முறையும் களத்திற்குள் சென்றபோது, பெலனையும் ஞானத்தையும் தரும்படி தேவனிடம் மௌனமாக ஜெபித்தார். அவர் சண்டையிட்ட முறை, பார்வையாளர்களை மட்டுமல்ல; நடுவர்களையும் கவர்ந்தது.

இறுதிப் போட்டியில் விளையாட நிவாஸ் ஆயத்தமானார். பேரமைதி தனக்குள் வருவதை உணர்ந்தார். தான் தனியே இல்லை என்ற தெய்வீக நிச்சயமும் அவருக்குள் எழுந்தது. குடும்பத்தினரும், இயேசு அழைக்கிறார் ஜெபக்குழுவினரும் தனக்காக ஏறெடுத்த ஜெபங்களை அவர் நினைவுகூர்ந்தார். புதுநம்பிக்கையுடன் அந்தச் சுற்றில் விளையாடி, வெற்றிக்கான புள்ளிகளைப் பெற்றார்.



நிவாஸ் வெற்றி பெற்றதாக நடுவர் அவர் கையை உயர்த்தி அறிவித்ததும் பார்வையாளர்கள் உற்சாகமாய் பாராட்டினர். அகில இந்திய கராத்தே போட்டியில் முதலிடத்தை வென்று தங்கப்பதக்கம் பெற்றார். பதக்கம் கழுத்தில் அணியப்பட்டபோது, ஆனந்தக் கண்ணீர் வடித்தார்; தேவனுடைய நித்திய கிருபைக்காக அவரை மனதார ஸ்தோத்திரித்தார்.

“**இந்த தங்கப்பதக்கம் எனக்கானது மட்டுமல்ல; தேவனுடைய உண்மைக்கும் இது சாட்சியாக இருக்கிறது. எல்லாவிதத்திலும் எனக்கு பெலனாக இருந்து வரும் இயேசு கிறிஸ்துவுக்கே இந்த வெற்றியை சமர்ப்பிக்கிறேன்**” என்று நிவாஸ் கூறுகிறார்.

நிவாஸின் வாழ்க்கையானது, தற்காப்பு கலையில் தங்கப் பதக்கம் வென்றதை பற்றியது மட்டுமல்ல, விசுவாசம், ஒழுக்கம், விடாமுயற்சி இவற்றின் வலிமைக்கும் சாட்சியாகும். தேவன் உங்கள் பட்சத்தில் இருந்தால், எந்த இலக்கையும் அடையலாம். எந்த எதிராளியும் பெலவான் அல்ல; எட்ட முடியாத வெற்றி எதுவும் இல்லை என்பதை நிவாஸ் நிரூபித்துள்ளார்.



# இளம் பங்காளர் திட்டத்தில் இணைந்திடுங்கள்

அன்பு தேவ பிள்ளையே,

அனுதினமும் ஒவ்வொரு இளம் பங்காளருக்காகவும் ஜெப கோபுரங்களில் ஜெபிக்கிறோம். நிவாஸைப் போல, நீங்களும் சாட்சி பகர்ந்து தேவனை மகிமைப்படுத்தலாம். உங்கள் சாட்சி, தேவ வல்லமையை வெளிப்படுத்துவதோடு, மற்றவர்கள் விசுவாசத்தில் வளரவும் உதவும். தேவன் தாமே உங்களை தொடர்ந்து வழிநடத்தி, பிரகாசமும் செழிப்புமான எதிர்காலத்தை அருளுவாராக (எரேமியா 29:11)

**பதிவுக்கு தேவையான விவரங்கள்:**

திரு./செல்வி. ....................................................................................................................

பிறந்தநாள்: ........................................ தந்தை / பாதுகாவலரின் பெயர்: ...............................................

தொடர்பு முகவரி :....................................................................................................................

நகரம்: .................................. பின்கோடு: ............................. மொபைல் எண்: .............................

மின்னஞ்சல் முகவரி : ............................................ வாட்ஸ்அப் எண்: ............................................

**மேலும் விவரங்களுக்கு:**

**ஜெப கோபுரம்:** உங்கள் பகுதியிலுள்ள ஜெப கோபுரத்திற்கு சென்று அறிந்துகொள்ளலாம்

**இணையதளம்:** www.jesuscalls.org மின்னஞ்சல்: partnercare@jesuscalls.org

**பங்காளர் சேவை எண்:** 044 - 23456677 (காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை, இந்திய நேரம்)

**அஞ்சல் முகவரி:** ஜெப கோபுரம், 16, Dr. டி.ஜி.எஸ்.தினகரன் சாலை,
சென்னை - 600 028.

QR CODE ஸ்கேன் செய்தும் அனுப்பலாம்

**இளம் பங்காளர் திட்டத்திற்கு நீங்கள் எளிதாக காணிக்கை அனுப்பக்கூடிய வழிகளை இந்த இதழின் 14-ம் பக்கத்தில் காணலாம்.**



சிறுவர் பகுதி

# ஜிம் & ஜெமி
















## கதையின் நீதி:

தாழ்மையாக இருக்கும்போதும், நம்முடைய தாலந்துகளை, நமக்குப் பெருமையாக அல்லாமல், பிறருக்கு உதவி செய்ய பயன்படுத்தும்போதும் நாம் சிறந்தவர்களாகிறோம்.

மனப்பாட வசனம்:

**"ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்"** பிலிப்பியர் 2:3

# இன்றைய இறை தியானம்

நவம்பர் - 2024



**1** **உபாகமம் 31:8 - கர்த்தர் உங்களுக்கு முன்பாக போவார்**
தியானத்திற்கு: யாத். 13:21; சங். 68:7,8; ஏசாயா 52:12

**2** **எபேசியர் 1:17 - ஆவிக்குரிய ஆசீர்வாதம்**
**தியானத்திற்கு:** ஏசாயா 11:2; கலா. 5:22,23; எபே. 1:3

**3** **சங்கீதம் 119:50 - கர்த்தருடைய வாக்கு**
**தியானத்திற்கு:** யோசுவா 17:4; எரே. 7:23; எபி. 6:17

**4** **ஏசாயா 46:4 - கர்த்தர் நம்மை தாங்குவார்**
**தியானத்திற்கு:** சங்கீதம் 41:3; 63:8; ஏசாயா 41:10

**5** **நீதிமொழிகள் 12:24 - ஜாக்கிரதையாயிருங்கள்**
**தியானத்திற்கு:** நீதி. 22:29; 1 பேதுரு 4:7; 2 பேதுரு 1:10

**6** **நீதிமொழிகள் 10:22 - கர்த்தர் ஐசுவரியத்தைத் தருகிறவர்**
**தியானத்திற்கு:** ஆதி. 26:12,13; 2 நாளா. 1:11,12; ரோமர் 10:12

**7** **யாத்திராகமம் 15:26 - பரிகாரியாகிய கர்த்தர்**
**தியானத்திற்கு:** உபா. 7:15; ஏசாயா 53:5; 1 பேதுரு 2:24

**8** **சங்கீதம் 92:10 - கர்த்தர் உங்களை உயர்த்துவார்**
**தியானத்திற்கு:** சங். 37:34; மத். 23:12; யாக். 4:10

**9** **1 கொரிந்தியர் 3:7 - தேவனாலே எல்லாம் கூடும்**
**தியானத்திற்கு:** எரே. 32:17,27; மாற்கு 10:27; லூக்கா 18:18-27

**10** **1 கொரிந்தியர் 8:3 - நீங்கள் தேவனால் அறியப்பட்டிருக்கிறீர்கள்**
**தியானத்திற்கு:** சங். 139:1-4; எரே. 1:5; நாகூம் 1:7

**11** **ரோமர் 10:9 - விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவீர்கள்**
**தியானத்திற்கு:** மாற்கு 16:16; அப். 14:8-10; 16:31; எபே. 2:8

**12** **யோவான் 6:63 - கர்த்தருடைய வசனம்**
**தியானத்திற்கு:** 1 சாமு. 3:1; சங். 105:19; லூக்கா 4:32

**13** **சங்கீதம் 97:10 - கர்த்தர் நம்மை தப்புவிக்கிறார்**
**தியானத்திற்கு:** ஏசாயா 46:4; எரே. 39:17; தானி. 6:16-23

**14** **சங்கீதம் 118:6 - கர்த்தர் உங்கள் பட்சத்தில் இருக்கிறார்**
**தியானத்திற்கு:** சங். 56:9; எசே. 36:9; சக. 9:14

**15** **சங்கீதம் 3:3 - கர்த்தர் நம் கேடகம்**
**தியானத்திற்கு:** ஆதி. 15:1; 2 சாமு. 22:3; சங். 28:7

**16** **நியாயாதிபதிகள் 5:31 - சூரியனைப்போல பிரகாசிப்பீர்கள்**
**தியானத்திற்கு:** நீதி. 4:18; மத். 5:14-16; 2 கொரி. 4:6

**17** **யோவான் 7:38 - தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்**
**தியானத்திற்கு:** ஆதி. 15:1-6; தானி. 6:16-23; மாற்கு 9:17-27

**18** **சகரியா 9:12 - இரட்டிப்பான நன்மை**
**தியானத்திற்கு:** யோபு 42:10; ஏசாயா 61:7; யாக். 1:17

**19** **ரோமர் 8:37 - கர்த்தர் ஜெயத்தைத் தருவார்**
**தியானத்திற்கு:** நீதி. 21:31; 1 கொரி. 15:57; 2 கொரி. 2:14

**20** **சங்கீதம் 16:11 - பரிபூரணம்**
**தியானத்திற்கு:** உபா. 28:11; நீதி. 28:20; பிலி. 4:18,19

**21** **யோவான் 5:24 - நித்திய ஜீவன்**
**தியானத்திற்கு:** மத். 19:29; லூக்கா 18:30; தீத்து 3:6,7

**22** **அப்போஸ்தலர் 1:8 - நீங்கள் பெலனடைவீர்கள்**
**தியானத்திற்கு:** சங். 138:3; ஏசாயா 40:31; பிலி. 4:13

**23** **சங்கீதம் 42:8 - கர்த்தர் கிருபை அளிக்கிறார்**
**தியானத்திற்கு:** யாத். 33:17-19; சங். 84:11; யாக். 4:6

**24** **சங்கீதம் 100:3 - கர்த்தரே தேவன்**
**தியானத்திற்கு:** யாத். 15:2; உபா. 7:9; 2 நாளா. 33:13

**25** **யோவான் 15:7 - கர்த்தரில் நிலைத்திருங்கள்**
**தியானத்திற்கு:** மீகா 5:4; மத். 10:22; 1 யோவான் 4:12-16

**26** **யாக்கோபு 1:12 - ஜீவகிரீடம்**
**தியானத்திற்கு:** சங். 132:18; சகரியா 9:16; வெளி. 2:10

**27** **நீதிமொழிகள் 12:28 - நீதியின் பாதை**
**தியானத்திற்கு:** சங்கீதம் 5:8; நீதி. 8:21; ஏசாயா 26:7

**28** **சங்கீதம் 78:53 - தேவன் உங்களை வழிநடத்துவார்**
**தியானத்திற்கு:** உபா. 32:12; நெகே. 9:12; சங். 77:20

**29** **உபாகமம் 28:5 - எல்லாவற்றிலும் ஆசீர்வாதம்**
**தியானத்திற்கு:** ஆதி. 22:15-18; சங். 115:12,13; கலா. 3:8,9

**30** **சங்கீதம் 91:4 - கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலம்**
**தியானத்திற்கு:** யாத். 19:4; உபா. 32:11,12; ரூத் 2:12; சங். 36:7




இன்றைய ஆசீர்வாதத்திற்காக Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்

www.jesuscalls.org

Jesus Calls Tamil

www.familychannel.org



# நீதியின் கனிகளால் நிறைந்திருங்கள்!

- சகோதரி ஸ்டெல்லா தினகரன்

**"தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும் படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்து வின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்."** (பிலிப்பியர் 1:10,11)

இதுவே கர்த்தருக்கு பிரியமானதும், பக்தி நிறைந் ததுமான "**கனிதரும் வாழ்வாகும்**". "**நம்முடையவர் களும், கனியற்றவர்களாயிராதபடி...நற்கிரியைகளைச் செய்ய பழகட்டும்**" (தீத்து 3:14) என்றும் வேதம் நமக்கு தெளிவாகப் போதிக்கிறது.

இந்த உலக வாழ்வில் இவ்வாறு "கனிதரும் வாழ்வை" நாம் வாழ்வோமானால், கர்த்தருக்கும், மனிதருக்கும் முன்பாக நம்முடைய வாழ்வானது பிரியமானதாகவும், ஆசீர்வாதமானதாகவும் விளங்கும். வேதாகம ஆதாரங்களுடன் சில வேதாகம பக்தர்களின் வாழ்வின் அடிப்படையைக் கொண்டு, இந்த சத்தியத்தை ஆராய்ந்து பார்த்து, நம் அன்றாடக வாழ்வில், நீதியின் கனிகளால் நிறைந்த வாழ்வினை வாழ்ந்து தெய்வீக ஆசீர்வாதங்களை நிறைவாகப் பெறுவோமா?

### கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனி

"ஆண்டவரே, நீதி உமக்கே உரியது" (தானியேல் 9:7) என்று வேதம் சொல்கிறது. சங்கீதம் 11:7-இலும், "கர்த்தர் நீதியுள்ளவர்; நீதியின் மேல் பிரியப் படுபவர்" என்றே வாசிக்கிறோம். நாம் அவபக்தியையும், லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும், தேவ பக்தியுமுள்ளவர்களாக இவ்வுலகில் ஜீவனம் பண்ண வேண்டுமென்று வேதம் நமக்கு போதிக்கிறது (தீத்து 2:12).

### இந்த பொல்லாத உலகில் நாம் அத்தகைய நீதிமான்களாக மாறுவது எப்படி?

**"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக் கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே."** (ரோமர் 5:8,9)

2 கொரிந்தியர் 5:21-ல் வாசிக்கிறபடியே, "நாம் இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு பாவம் அறியாத அவரை தேவன் நமக்காக பாவமாக்கினார்".

**"இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலை யாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத் திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக் குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன் னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது."** (கொலோசெயர் 1:13,14)

இதே காரியத்தை, எபிரெயர் 9:14-இலும் நாம்

தெளிவாக வாசிக்கிறோம். இவ்விதமாக, கர்த்தராகிய இயேசு, பாவிகளாயிருக்கையில் நம்மை தெரிந்து கொண்டு, தாம் சிலுவையில் சிந்திய தமது பரிசுத்த இரத்தத்தினாலே நம்மை பாவமறக் கழுவி பரிசுத்தப் படுத்தி, நீதிமான்களாக்குகிறார் (ரோமர் 8:30). ஏசாயா 53:11-இலும் அதையே நாம் வாசிக்கிறோம். 1 யோவான் 1:9-ல், "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களையெல்லாம் நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார்" என்றும் வாசிக்கிறோம்.

சவுல் என்ற கொடூரமான மனிதன் எவ்வாறு இவ்விதமான "தெய்வீக மனிதனாக", "நீதிமானாக" மாறினான் என்பதைக் குறித்து நாம் தெளிவாக வேதத்தில் வாசிக்கிறோம். அவனே தன் அனுபவத்தை கீழ்க்கண்டவாறு விவரிக்கிறான்.

> "**கிறிஸ்துவுடனே கூட சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.**"
>
> (கலாத்தியர் 2:20)

அருமையானவர்களே, இந்தவிதமான இரட்சிப்பை, நீதியின் மார்க்கத்தை நீங்களும் உங்கள் சொந்த வாழ்க்கையில் பெற்று அனுபவிக்க விரும்புகிறீர்களா? அப்படியானால், உடனே நீங்கள் முழங்கால்படியிட்டு, உங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, அதினிமித்தம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கிருபையாக அருளுகிற இரட்சிப்பைப் பெற்று, நீதியின் கனிகளினால் நிறைந்தவர்களாய் கர்த்தருக்கு சொந்தமானவர்களாக மாறி, ஆசீர்வாதம் பெறுங்கள். இந்த வார்த்தைகள் மூலம் தொடப்பட்டு இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளுவீர்களானால், உங்கள் சாட்சிகளை உடனே எனக்கு எழுதுங்கள். நாம் ஒருமித்து கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம்!

**ஆண்டவராகிய இயேசு கிருபையாக அருளுகிற இரட்சிப்பைப் பெற்று, நீதியின் கனிகளினால் நிறைந்திருங்கள்**

### நீதிமான்களுடைய வேர் கனிகொடுக்கும்

> "**நீதிமானுடைய வேர் கனி கொடுக்கும்.**"
>
> (நீதிமொழிகள் 12:12)

வேத புத்தகத்திலே, ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு போன்ற பக்தர்கள் தாங்கள் கர்த்தருக்கென்று நீதிமான்களாக வாழ்ந்ததோடல்லாமல், அவர்கள் சந்ததியும் அவ்வாறே கர்த்தருடைய ஆசீர்வாதத்தை பெற்றிருந்தார்கள் என்றும், "**தேவன் அவ்வாறு நீதிமானுடைய சந்ததியோடு இருந்தார்**" (சங்கீதம் 14:5) என்றும் நாம் வாசிக்கிறோம்.

> "**ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக.**"
>
> (கொலோசெயர் 2:6,7)

### கர்த்தருக்குள் வேர் கொண்டு நீதியின் வழிகளில் வாழ்வது எப்படி?

எபேசியர் 4:22-24 வரையுள்ள வசனங்களில் இதை தெளிவாக வாசிக்கிறோம்.

> "**அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ளுங்கள்.**"

1 யோவான் 2:16,17-ல் வாசிக்கிறபடியே, உலகம் நமக்கு அருளக்கூடிய கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகிய இவைகளையெல்லாம் நம்மைவிட்டு முற்றிலுமாக அப்புறப்படுத்தி, தேவ சித்தத்தை பயபக்தியோடு நிறைவேற்றுகிறவர்களாக, நீதியின் வழிகளில் நடப்போமானால், கர்த்தருக்கு பிரியமானதும், அவருக்குள் வேர் கொண்டதுமான ஆழமான பக்தியும், பரிசுத்தமும் நீதியும் நிறைந்த வாழ்வை கர்த்தர் நமக்கு நிச்சயம் அருளிச் செய்வார்.

யோசேப்பு "நீரூற்றண்டையிலுள்ள கனிதரும் செடியாக" விளங்கினான் என்று வேதத்தில் வாசிக்கிறோம் (ஆதியாகமம் 49:22). காரணம், சிறுவயது முதலே அவன் தன் தகப்பன் யாக்கோபைப் போல் நீதியின் வழிகளைத் தெரிந்துகொண்டான். ஒரு ஸ்திரீயினிமித்தம் பாவத்திற்குள்ளாகும் பயங்கரமான சூழ்நிலை அவனுக்கு வந்தபொழுதும், "தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி?" என்று தெய்வ பயத்துடன் அதற்கு விலகி, தன்னை பரிசுத்தவானாகக் காத்துக்கொண்டான். அதினிமித்தம் "வேர் கொண்டதும், கனி தருகிறதுமான ஆசீர்வாதம்

நிறைந்த தெய்வீக வாழ்வை தேவன் அவனுக்கு அருளிச் செய்து, அவனை கனப்படுத்தினார் அல்லவா?'' அவனுடைய ''தாழ்மையான வாழ்வானது'' எவ்வளவாக தேவனால் ''மேன்மையாக'' உயர்த்தப்பட்டது! தன் சொந்த சகோதரர்களால் எத்தகைய தாழ்வு நிறைந்த சூழ்நிலைக்கு அவன் தள்ளப்பட்டு, கண்ணீரின் பாதையில் போய் கொண்டிருந்த நிலையில், தேவனுக்குள் வேர் கொண்டவனாய் பக்தி வைராக்கியத்துடன் வாழ்ந்த படியால், தேவன் எவ்வளவு அழகாக அவன் வாழ்வை ''கனிதரும் வாழ்வாக'' மாற்றியமைத்தார். கர்த்தர் அவனுக்கு சிறு வயதில் சொப்பனத்தில் வெளிப்படுத்தியபடியே, அவனுடைய சகோதரர்கள் அனைவரும் அவனை கனப்படுத்தி, பணிந்துகொள்ளும்படியான உன்னதமான ''கனிதரும் வாழ்வை'' தேவன் அவனுக்கு அருளிச் செய்தார் அல்லவா?

தேவன் ஒரு தம்பதியரை கிருபையாக தமது இரட்சிப்பின் பேரின்பத்தினால் நிறைத்து தமக்கென்று தெரிந்து கொண்டார். ஆனால், அவர்களுடைய குடும்பத்தினரோ, அவர்கள் பெற்றிருந்த இரட்சிப்பின் மேன்மையை உணராமல், அவர்களை ஒதுக்கித் தள்ளி வைத்து, மிகவும் அலட்சியமாக நடத்தினர். காரணம், அந்த தம்பதியினர் தங்கள் வாழ்வில் ''ஐசுவரியத்தில் மிகவும் குறைவுபட்டவர்களாக'' காணப்பட்டார்கள். எனினும் அவர்கள், தாங்கள் எவ்வளவாய் தாழ்த்தப்பட்டார்களோ, அவ்வளவாக கர்த்தரையே உறுதியாகப் பற்றிப் பிடித்துக்கொண்டார்கள். கர்த்தர் அவர்களுடைய உண்மையையும், உத்தமத்தையும் பார்த்தார். நீதிமொழிகள் 28:20-ல், வாசிப்பதுபோன்று, ''உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்'' என்ற தம்முடைய வார்த்தையின் படியே, அவர்களது வாழ்வை உயர்த்தி, தமது சம்பூரண ஆசீர்வாதங்களால் அவர்களை நிரப்பினார். இதைக் கண்ட அவர்களது குடும்பத்தினர், ''அவர்கள் நம்பி வழிபடுகிற ஆண்டவரே அவர்களை அவ்வாறு உயர்த்தி மேன்மைப்படுத்தியிருக்கிறார்'' என்ற உண்மையை உணர்ந்தவர்களாக, தங்கள் குறைவானதும், தேவனுக்கு பிரியமில்லாததுமான வாழ்வும், தெய்வ பயத்துடன் அவருக்கு பிரியமானதாக மாறும்படி தங்களை அர்ப்பணித்தார்கள். அவர்களைப் போன்று வேறு அநேகரும்கூட அவர்களுடைய வழிகளைப் பின்பற்றி நீதிமான்களாக வாழும் பாக்கியம் பெற்றவர்களானார்கள்.

அன்பானவர்களே, உங்கள் வாழ்வும் இவ்வாறு கிறிஸ்துவுக்குள் வேர் கொண்டதும், அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தும் ''கனி'' நிறைந்ததுமாக இருக்கிறதா? என்பதை சோதித்துப் பார்த்து, நீங்களும் அதை பெற்றுக்கொள்ளுங்கள்.

> **கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் ஜாக்கிரதையாக இருப்பதின் மூலம், நீங்கள் கர்த்தருக்கென்று கனிகொடுத்து, எழும்பிப் பிரகாசிப்பீர்கள்**

### ஆவியின் கனி நீதியிலும் உண்மையிலும் விளங்கும்

கர்த்தரோடு நெருங்கி வாழ்வதிலும், அவருக்கு மகிமையான சாட்சிகளாக நம் வாழ்வு விளங்குவதிலும் நாம் ஜாக்கிரதையாயிருக்கும்பொழுது, கர்த்தர் தமக்கு பிரியமான அத்தகையோருக்கு, தமது பரிசுத்த ஆவியின் அருள்மாரியை பொழிந்தருளுகிறார் என்பது நிச்சயமான காரியமாகும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையிலே தம்மையே தியாக பலியாக அர்ப்பணித்து, மரித்த பின்பு, தேவ சித்தத்தின்படி மூன்றாம் நாள் தேவ வல்லமையினால் உயிர்த்தெழுந்தார். அதன்பிறகு, அப்போஸ்தலர் 1:3-ல் நாம் வாசிக்கிறபடியே, தம்முடைய சீஷர்களுக்கு 40 நாளளவும் பல வேளைகளில் தரிசனமானார். அப்பொழுது, அப்போஸ்தலர் 1:5,8,14 ஆகிய வசனங்களில் வாசிக்கிறபடியே, அவர்களை ஜெபத்திலே ஒருமனப்பட்டு காத்திருக்கும்படி அவர் வழிநடத்தினதினிமித்தமும், அவ்வாறே அவர்கள் காத்திருந்து ஜெபித்ததினிமித்தமும், அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் வாசிக்கிறபடியே, பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் யாவரும் பரிசுத்த ஆவியினால் அளவில்லாமல் நிரப்பப்பட்டார்கள்.

அந்த தெய்வீக அனுபவத்தைப் பெற்ற பின்பு, அவருடைய சீஷர்கள் நீதியும், உண்மையும் நிறைந்தவர்களாக விளங்கவும், அதினிமித்தம் தேவ நாம மகிமைக்கென்று ''கனி'' தருகிற தெய்வீக வாழ்வை வாழவும் பரிசுத்த ஆவியானவர் அவர்களை வழிநடத்தினார் என்பதைத் தெளிவாக அறிந்துகொள்கிறோம்.

ஆம் பிரியமானவர்களே, தேவாதி தேவன், ஆண்டவராகிய இயேசுவை நமக்கெல்லாம் முன்மாதிரியாக தம் தூய ஆவியால் நிரப்பி, திரளான மக்களுக்கு ஆசீர்வாதமாக விளங்கும்படி வழிநடத்தியதை நாம் வேதத்தில் சுவிசேஷ புத்தகங்களில் தெளிவாக வாசிக்கிறோம். அதன்பிறகு அவரை பின்பற்றி, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரம்பிய அவருடைய சீஷர்களையும் அவர் அவ்வாறே தமக்கென்று ''கனிதருபவர்களாக'' விளங்கப்

பண்ணியதையும் தொடர்ந்து வாசிக்கிறோம்.

இன்றும் அதேவண்ணமாக, யார் யார் ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்து வாழ்ந்து காண்பித்த வாழ்க் கையை முன்மாதிரியாகக் கொண்டு, தேவனுக்கு முன்பாக பயபக்தியோடு நடந்துகொள்கிறார்களோ, அவர்களையெல்லாம் அதேவண்ணமாக தேவன் தமது தெய்வீகமான பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் நிரப்பி, தமது தெய்வீகப்பாதையில் கரம்பிடித்து வழிநடத்துகிறார். இவ்வாறு பயபக்தி யோடு நடந்து தங்கள் வாழ்வில் "கிறிஸ்துவுக்கென்று கனி" தரும் வாழ்வைப் பெற்றிருக்கிற பக்தர் பலரை இன்றைக்கும் நாம் காண்கிறோம். அவர்களுடைய நற்சாட்சி நிறைந்த வாழ்வின்மூலம் அநேகர் கர்த்தரை பயபக்தியுடன் பின்பற்றுவதிலும், அவருடைய சித்தத்தை கவனமாக நிறைவேற்றுவதிலும் ஜாக்கிர தையாக இருப்பதின் மூலம், அவர்கள் கர்த்தருக் கென்று கனிகொடுத்து, நீதியிலும், உண்மையிலும் சிறந்த சாட்சிகளாக கர்த்தருக்கென்று எழும்பிப் பிரகாசிக்கிறார்கள்.

அன்பானவர்களே, இதை வாசிக்கிற நீங்களும்கூட இத்தகையவிதமாய், "கர்த்தருக்கென்று ஒளி வீசிப் பிரகாசிக்க" பயபக்தியுடன், தனியாகவோ, குடும்பமா கவோ உங்கள் வாழ்வை உடனடியாக அர்ப்பணி யுங்கள். இத்தகைய மேலான தெய்வீக வாழ்வை கிருபையாக தேவன் எங்கள் குடும்பத்திற்கு தெரிந் தெடுத்து அருளியதால், நாங்கள் யாவரும் ஒருங் கிணைந்து, அவர் நாமத்தை மகிமைப்படுத்தி வரும் படியாக அவரே எங்களை வழிநடத்தி வருகிறார். இத்தகைய பாக்கியமான "கனிதரும் தெய்வீக வாழ்வை" தேவன் உங்களுக்கும் அருளும்படியாக நீங்களும் கர்த்தரிடம் கேட்டு, பயபக்தியுடன்கூடிய நிறைவான ஆசீர்வாதம் பெறுவீர்களாக.

## எஸ்தர் ஜெபக்குழு தலைவிகள் கூட்டம் - அறிக்கை



அன்பு தாயார் ஸ்டெல்லா தினகரன் அவர்களுக்கு ஆண்டவர் கொடுத்த வழிநடத்துதலின்படி, சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களில் செயல்பட்டு வரும், எஸ்தர் ஜெபக்குழு, வாலிபப் பெண்கள் எஸ்தர் ஜெபக்குழு, ஜூனியர் எஸ்தர் ஜெபக்குழு மற்றும் தம்பதியர் எஸ்தர் ஜெபக்குழுக்களின் தலைவிகள் மற்றும் தலைவர்களுக்கென்று, 2024, செப்டம்பர் 7-ம் தேதி சனிக்கிழமை அன்று சகோ. டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரத்தில் ஒரு சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில், 240 எஸ்தர் ஜெபக்குழுத் தலைவிகள் மற்றும் தலைவர்கள் மிகுந்த வாஞ்சையோடும், எதிர்பார்ப்போடும் வந்து கலந்துகொண்டனர். ஆரம்பமுதற்கொண்டே தேவ பிரசன்னம் கூடியிருந்த அனைவரையும் நிரப்பியது.

தொடர்ந்து, அருமை தாயார் ஸ்டெல்லா தினகரன் அவர்கள், உன்னதப்பாட்டு 4:12-16 ஆகிய வசனங்களின் அடிப்படையில், ஒவ்வொருவரும் தேவனுக்கென்று "கனி தரும் வாழ்வு" எப்படி வாழ வேண்டுமென்று தேவ செய்தியளித்து, வல்லமையான ஜெபம் ஏறெடுத்தார்கள். அது, கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. இறுதியாக, எஸ்தர் ஜெபக்குழு இயக்குநர் Dr. S.J. கிங்ஸ்லி அவர்கள், அனைவரையும் அபிஷேகத்தில் நடத்தினார். ஒவ்வொருவரும் கர்த்தருக்கென்று எழும்பிப் பிரகாசிக்கிறவர்களாக விளங்க வேண்டுமென்ற வாஞ்சையுடன் கடந்துசென்றனர். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

2024, செப்டம்பர் 27-ம் தேதியன்று, அருணாச்சல பிரதேசம், இட்டா நகரை சேர்ந்த 16 எஸ்தர் ஜெபக்குழு தலைவிகள், சென்னையில், சகோதரி ஸ்டெல்லா தினகரன் அவர்களை நேரில் சந்தித்து, எஸ்தர் ஜெபக்குழு மூலம் தாங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை பகிர்ந்துகொண்டனர். எஸ்தர் ஜெபக்குழு தலைவி ஒருவர், கர்த்தர் தன்னை எவ்வாறு குணமாக்கினார் என்ற அற்புதத்தை சாட்சியாக சொன்னார்கள். இறுதியில், சகோதரி அவர்கள் ஒவ்வொருவருக்காக வும் தனித்தனியாக ஜெபித்தார்கள். அனைவரும் மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றனர்.



# மகிழ்ந்து சிரித்திட உதவுவோம்

SEESHA



பண்டிகை காலம் என்றாலே, அனைவரும் ஒன்று கூடுவதால் கிடைக்கும் மகிழ்ச்சியோடு, புத்தாடைகள் தரும் மகிழ்ச்சியும் சேர்ந்துகொள்ளும். ஆனால், ஏழைக் குழந்தைகளுக்கு அந்த வாய்ப்பு கிடைப்பதில்லை. அவர்கள் அணிந்திருக்கும் ஆடையே அவர்களுடைய வறுமையைக் காட்டிவிடும். தங்கள் உடையை எண்ணி அவர்கள் மனதுக்குள் குறுகிப் போகிறார்கள்.



நல்ல ஆடை தரும் மதிப்பையும், மகிழ்ச்சியையும், வளருவதற்கு ஏற்ற சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு, ஆண்டுதோறும் வருட முடிவு பண்டிகை காலத்தில் இந்தியா முழுவதும் நலிவுற்ற பின்னணியை சேர்ந்த ஏழைக் குழந்தைகளுக்கு சீஷா மூலமாக புத்தாடைகளை வெகுமதியாக வழங்குகிறோம். இவர்களுள் சில பிள்ளைகள் அப்பா அல்லது அம்மாவை இழந்தவர்கள்; சிலர் மாற்றுத் திறனாளிகள்; சிலர் எய்ட்ஸ் பாதிப்புக்குள்ளானவர்கள்; சிலர் இடம் பெயர்ந்தவர்கள்.

## வெகுமதி தரும் புது நம்பிக்கை



என் பெயர் அர்விந்த்பாய். குஜராத்திலுள்ள ஜூனி செல்டிபாடா என்ற இடத்திலுள்ள சீஷா கற்றல் மையத்தில் படிக்கிறேன். பள்ளியிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும்போதும், பண்டிகை நாட்களிலும் புது ஆடை அணிய விரும்புவேன். ஆனால், வீட்டில் இருக்கும் பணக்கஷ்டத்தினால் புதிய ஆடைகளை வாங்க முடியவில்லை. ஆண்டு முடிவில் பண்டிகை காலத்தில் சீஷா எனக்கு நல்ல புத்தாடைகளை வெகுமதியாக வழங்குகிறது. இந்தப் புத்தாடைகளை அணிந்து, நண்பர்களோடு சேர்ந்திருப்பது எனக்கு அதிக சந்தோஷத்தைத் தருகிறது. இந்த நல்ல வெகுமதியை வழங்கும் சீஷாவுக்கு நன்றி.

## வாழ்க்கையை மேம்படுத்தி, சமுதாயத்தை கட்டியெழுப்பும் பணியில் 21 ஆண்டுகள்

நலிவுற்ற மக்களுக்கு அறக்கொடை சேவைகளை செய்யும் உயரிய தரிசனத்தோடு 2003-ம் ஆண்டு, நவம்பர் மாதம் Dr. பால் தினகரனால் சீஷா தொடங்கப்பட்டது. இத்தனை ஆண்டுகளில், கல்வி, வாழ்வாதாரம், மருத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் சேவைகள் மூலம் சீஷா பல லட்சம் மக்களின் வாழ்வை தொட்டுள்ளது. உங்களைப் போன்ற பங்காளர்களின் பேராதரவின் மூலமே இவைகளை செய்ய முடிந்தது. 21-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும்போது, ஏழைகளுக்கு உதவி செய்ய நீங்கள் உதாரத்துவமாக அளித்து வரும் ஆதரவுக்கு மனதார நன்றி கூறுகிறோம்.

**இதுபோன்ற குழந்தைகளுக்கு இந்த ஆண்டும் அன்போடு புத்தாடை வழங்கி, சந்தோஷத்தை வெகுமதியாக அளிக்க ஆயத்தமாகி வருகிறோம். இந்த உன்னத பணியில் நீங்களும் இணைந்து, சிறுபிள்ளைகளை மகிழ்ச்சிப்படுத்தவும், அவர்கள் நம்பிக்கையோடு உலகை எதிர்கொள்ள உதவவும் உங்களை அழைக்கிறோம். கீழ்க்காணும் விதங்களில் நீங்கள் உதவலாம்.**

- 2 குழந்தைகளுக்கு புத்தாடைகள் வழங்க ரூ.1,000/-
- 20 குழந்தைகளுக்கு புத்தாடைகள் வழங்க ரூ.10,000/-
- நீங்கள் விரும்பும் எண்ணிக்கையில் புத்தாடைகள் வழங்கலாம்.

ALL DONATIONS ARE TAX-EXEMPTED UNDER SECTION 80G

DONATE TO SEESHA

UPI ID : 9384015155@okbizaxis

G Pay PhonePe Paytm UPI pay

You can also donate through www.cashfree.com/pay/seesha

044 66660000
+91 9300 600 600

www.seesha.org
info@seesha.org

* When you Donate send the Details to +91 9300 600 600

SEESHA house No.37, Gandhi Road, Tambaram (West), Chennai - 600045



Printed by G.L.B.Ernest and Published by G.L.B.Ernest on behalf of Jesus Calls and Printed at Rasi Graphics Private Limited, DP 69-71-A, Sidco Industrial Estate, Thirumazhisai, Poonamallee Taluk, Thiruvallur District. and published at 16, Dr. D.G.S. Dhinakaran Salai, Chennai - 28, Editor: G.L.B.Ernest



தேசிய வாலிபர் திருவிழா
NATIONAL
YOUTH
FESTIVAL
JAMSHEDPUR
டிசம்பர் 6, 7 2024
காலை 9 முதல் மாலை 5 மணி வரை
ஸ்டெல்லா ரமோலா, சாமுவேல் தினகரன், டேனியல் டேவிட்சன்
வயது:
13 முதல் 30 வரை
இன்றே பதிவு செய்யுங்கள்!
அனைத்து இயேசு அழைக்கிறார்
ஜெப கோபுரங்களிலும் பதிவு செய்யலாம்
பதிவுக்கான நன்கொடை: ரூ.1,000/- (தங்கும் வசதி இல்லாமல்)
[Conference Kit, உணவு, சிற்றுண்டி உட்பட] ரூ.1,200/- (தங்கும் வசதியுடன்)
6380752324 / 044-23456677 / 9791934446
BIT.LY/UNYF24




கோயம்புத்தூரில்
பெதஸ்தா
ஆசீர்வாத
கூட்டம்
நீங்கள் அற்புதத்தைப் பெற்றுக்கொள்ளும் நாள்
இடம்:
Dr. டி.ஜி.எஸ். தினகரன் மையம்,
காருண்யா நகர்,
கோயம்புத்தூர் 641 114
2024 நவம்பர்
2
சனிக்கிழமை
பிற்பகல் 2 மணி
தேவ செய்தியும் ஜெபமும்:
Dr. பால் தினகரன் & குடும்பத்தினர்
தேவ செய்தி தெலுங்கு / மலையாளம் / கன்னடம் / ஹிந்தி மொழிகளில் மொழிபெயர்க்கப்படும்
கோயம்புத்தூர் - பெதஸ்தா (காருண்யா நகர்) இடையே சிறப்புப் பேருந்துகள் இயங்கும்
மேலும் விவரங்களுக்கு: 0422 - 2614580 / 94878 46601

REGISTERED NEWSPAPER RNI NO.TNTAM/2003/10418 RNP LICENSE NUMBER TN/CC(S)DN/588/22-24
WPP LICENCE NUMBER TN/PMG(CCR)/WPP 625/2022-24 DATE OF PUBLICATION 18TH OF EVERY MONTH
POSTED AT PATRIKA CHANNEL, EGMORE RMS, POSTING DATE 19TH - 25TH OF EVERY MONTH

JESUS CALLS

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் (யோவான் 16:20)

# சத்தீஸ்கர் மாநிலம் ஜக்தல்பூரில்
# பஸ்தர் (BASTAR)
# பிரார்த்தனை திருவிழா

**2024 நவம்பர்**
**8-10**
வெள்ளி
சனி
ஞாயிறு
மாலை 5 மணி



தேவ செய்தியளித்து பிரார்த்தனை ஏறெடுப்போர்:
## Dr. பால் தினகரன்
மற்றும் குடும்பத்தினர்

இடம்:
## தரம்புரா மைதானம்,
ஜக்தல்பூர், சத்தீஸ்கர்

தேவனுடைய வல்லமையான தொடுதலை அனுபவியுங்கள்

அனுமதி இலவசம்!

பஸ்தர் பிரார்த்தனை திருவிழா
ஒருங்கிணைப்பு குழுவினர், ஜக்தல்பூர்
மேலும் விவரங்களுக்கு: JESUS CALLS PRAYER TOWER, 2ND FLOOR, VARGISH WINGS, ABOVE VISHAL MEGAMART, DHARMPURA ROAD, JAGDALPUR - 494001, CHHATTISGARH.
தொலைபேசி: 0771 4335600 / 6380752277

காணிக்கை கொடுங்கள்
ஆசீர்வாதம் பெறுங்கள்!